# GRAHA LEELA

(IN TAMIL)

BY

P. S. MURUGESA MUDALIAR

rights reserved.]

# கிரக லீலை

## ஒரு தமிழ் நாடகம்



பி. எஸ். முருகேச முதலியார்,
இயற்றியது.

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட நாடகங்கள், கண்ணகியின் சாபம்,
நீதி ஆட்சி, பாரத வீரன், பழிவிலக்கு, சினிமா உற்பத்தியாளர்.

1940.

காபிரைட் செய்யப்பட்டிருக்கிறது.]

[விலை அணா 8.

# PREFACE.

---

## THIS DRAMA IS PROVING THAT PLANETS ARE RULING HUMAN LIFE.

All Societies, Professional and Amateur, as well as Cinema producers, are hereby requested that they will have to pay a 'Royalty' to me before staging or producing this, and get my permission before doing so. Otherwise they make themselves liable to be prosecuted for breach of copy right, which is now made as a criminal offence.

THE AUTHOR.

"Saravana Vilas",
New Bangalow Street,
Chintadripet, Madras.
15th August 1940.

## நாடக பாத்திரங்கள்.

---

| | | |
|---|---|---|
| பிரம்மானந்தம் | ... | சென்னையில் ஓர் பிரபல வியாபாரி |
| சுந்தரம் | ... | பிரம்மானந்தர் குமாரர் (கதாநாயகன்) |
| நல்லதம்பி | ... | சுந்தரத்தின் நண்பன் |
| மாதவன் | ... | சர். முனுசாமி முதலியார் குமாரன் |
| டாக்டர் சுகுமார் | ... | சுந்தரத்தின் மாப்பிள்ளை |
| மகாலிங்கம் | ... | டாக்டர் சுகுமார் பிதா |
| சுந்தரம் | ... | சுந்தரத்தின் பேரப்பிள்ளை |
| வங்கப்பா | ... | ரேணுகுண்டாவில் ஓர் வியாபாரி |
| சுபேதார் | ... | சிப்பாய்களின் அதிகாரி |
| மீனாக்ஷி | ... | சுந்தரத்தின் மனைவி |
| சூரியகுமாரி | ... | சுந்தரத்தின் மகள் |
| ஞானம்பாள் | ... | டாக்டர் சுகுமார் தாயார் |
| அலமேலு | ... | சுந்தரம் வீட்டு வேலைக்காரி |
| சாந்தராபாய் | ... | மீனாக்ஷியின் சினேகிதி |

[டாக்டர்கள், நரஸுகள், லாவாதேவி செய்யும் சௌகார், கோர்ட் அமீனா, ரெஜிமெண்டில்சேர்ந்த சிப்பாய்கள், ஸ்டேஷன் மாஸ்டர், டிக்கெட் பரிசோதகர், சத்திர காரியஸ்தன், பொன் சுரங்கத்தின் இன்ஜினீயர், சூபிரண்டெண்ட், கூலிகள், ஜோஸியக்காரி, வேலைக்காரி, கிளப் மெம்பர்கள், திக்கற்ற சிறுமிகள், பம்பாய் க்வர்னர் மனைவி, மைசூர் திவான், நகரவாசிகள் முதலியோர்கள்]. .

---

கதை நிகழுமிடம் :—சென்னை, பெங்களூர், மைசூர், பம்பாய்.

உ

கணபதி துணை

# கிரக லீலை.

## காட்சி 1

இடம் :—"பிரம்மானந்த விலாசம்", நுங்கம்பாக்கம்.

[அலங்கரிக்கப்பட்ட ஒரு ஹாலில் பிரம்மானந்தம் என்பவர் வியாதியுடன் படுக்கையில் படுத்தபடியிருக்க தனது ஏக புத்திரன் சுந்தரம் என்பவர் அருகில் அமர்ந்திருக்கிறார்]

பிரம்மா :—என் தேக நிலைமையைப்பற்றி டாக்டர் என்ன சொல்லுகிறார் ?

சுந்தரம் :—வியாதியொன்றுமில்லை என்றும், இருதயம் மட்டும் பலஹீனமாயிருப்பதாயும் தெரிவித்தார்.

பி :—இப்போது சனி திசை, வியாபாரத்தில் நஷ்டத்தை ஏற்படுத்தி, வியாதியையும் உண்டாக்கியது. மாரக திசையுமிருப்பதாக தெரிகிறது.

சு :—உங்களுக்குப் பயித்தியமா ! இப்போது இறந்துவிடமாட்டீர்கள்.

பி :—அப்படியேயிருக்கட்டும், உனக்கு சொல்லும் விஷயத்தை கவனித்து நடக்கவேண்டும்.

சு :—சரி, என்ன சொல்லுங்கள்.

பி :—தற்காலம் எந்த வியாபாரத்திலும் நன்மை ஏற்படுவதாய் விளங்கவில்லை. எதிலும் ஈடுபடாது ஓரியண்டல் பாங்கிலுள்ள 1,00,000 ரூபாயில் வரும்வருமானத்தைக் கொண்டு மீனாக்ஷியுடன் சுகமாய் வாழ் நாளைபோக்கு.

சு :—அப்படியே ஆகட்டும். டாக்டர் வருகிறார்.

பி :—டாக்டர் சார் வாருங்கள்.

டாக்டர் :—(பக்கத்தில் அமர்ந்து) எப்படியிருக்கிறது.

பி :—சௌக்கியந்தான் ஆனால்.........

சு :—அவர் பிழைக்கமாட்டாராம்.

டா :—அப்படி ஒன்றும் நேராது இருதயம் மெத்த பல ஹீனமடைந்திருக்கிறது. கவலையற்று யிருந்தால் சீக்கிரத்தில் குணமடையும் (இஞ்ஜக்ஷன் கொடுக்கிறார்.)

சு :—அதற்கு டானிக்கு கொடுக்கலாகாதா ?

டா :—அதற்குதான் இஞ்ஜக்ஷன் கொடுத்து வருகிறது. நாளடைவில் பலம் ஏற்படும், டானிக்கும் எழுதி கொடுக்கிறேன் அதையும் கொடுத்து வாருங்கள். (எழுதுகிறார்.)

பி :—தம்பி ! டாக்டருக்கு பீஸ் பாக்கியிருந்தால் கொடுத்து விடு. (சுந்தரம் உள்ளே போகிறான்.)

டா :—இதை வாங்கி இரண்டு வேளை ஆகாரத்திற்கு அரை மணிமுன் சாப்பிட்டுவாருங்கள். (சுந்தரம் நோட்டு அடங்கிய கவரைகொடுக்கிறான் பெற்றுக்கொண்டு), தாங்ஸ். தம்பி, டானிக்கு கொடுப்பதுடன் பெங்களூர் காய்கறிகளையும், சாத்துக்குடி ஜூஸும் கொடுத்து வாருங்கள். நமஸ்காரம் (போகிறார்.)

பி :—தம்பி இதை வாங்கிவரச்சொல். (சீட்டைகொடுக்கிறார்).

சு :—(பெற்று) போய் ! ஈமந்து ஐயா கம்பெனிலோ தீஸுக் குனிரா பின்னு ! (போய் பெற்றுச் செல்லுகிறான்).

பி :—பணம் கொடுக்கவில்லையே.

சு :—கணக்கில் வாங்கிவந்தால் பிறகு கொடுத்துவிடலாம். (மீனாக்ஷி சூப்பு கொண்டுவருகிறாள்).

பி :—மீனு ! இப்போதுதான் டாக்டர் இஞ்ஜக்ஷன் கொடுத்துச் சென்றார்.

சு :—அதைப்பற்றி பாதகமில்லை சாப்பிடலாம் (உள்ளே போகிறான்.)

மீனாக்ஷி :—காலையிலிருந்து ஒன்று சாப்பிடவில்லையே மாமா!

பி :—சரி, கொடும்மா (வாங்கி சாப்பிடுகிறார். அது சமயம் வேலையாள் சண்டே டைம்ஸ் பேப்பரை மேஜைமீது வைத்துச் செல்லுகிறான்.)

மீ :—[பேப்பர் தலைப்பில் ஓரியண்டல் பாங்கு மூடப்பட்டது என்பதை வாசித்து (Oriental Bank Payment Suspended)] மாமா! எந்த பாங்கில் பணம் கட்டிவைத்திருக்கிறீர்கள் ?

பி :—ஓரியண்டல் பாங்கியில், ஏன் கேட்கிறாய் ?

மீ :—இதைப்பாருங்கள் (கை நடுக்கத்துடன் பேப்பரை, கொடுக்கிறாள்.)

பி :—(அதை வாசித்துப்பார்த்து) ஹா! என்ன காலம், பணத்திற்கும் அழிவு ஏற்பட்டுவிட்டதா. (படுக்கையில் சாய்கிறார்).

மீ :—ராமா! சின்ன ஐயாவைக் கூப்பிடு! மாமா! மாமா! தைரியத்தை விடாதீர்கள் (சுந்தரம் வருகிறான்.)

சு :—என்ன! என்ன!

மீ :—ஓரியண்டல் பாங்கு மூடப்பட்டதாக பேப்பரில் பார்த்தார்.

சு :—எங்கே (பேப்பரை பார்த்து) உம். இதுவும் கால வித்தியாசந்தான். (பிதா அருகில் சென்று) நாயினா! நாயினா! கவலைப்படவேண்டாம். (கவனித்து) என்ன மேல் சுவாசம் வருகிறது நாயினா! நாயினா! பேச்சைக்

காணேும். அடே ராமா! டாக்டரை அழைத்துவா சீக்கிரம். (இருவரும் உபசரிக்கிறார்கள் சிறிது நேரத்திற்கெல்லாம் பிராணன் போய்விடுகிறது). ஹா! நாயினா! நாயினா! தாங்கள் சொன்னவாறு முடிவுகாலம் நேர்ந்துவிட்டதா.

மீ :—மாமா! மாமா! எங்களை பரதேசிகளாக்கி சென்றீரா. (இருவரும் பிரேதத்தின்மீது விழுகிறார்கள்.)

---

## காட்சி 2

### இடம் :—டிலைட்புல் கிளப் (Delightful Club), Mount Road.

[கட்டடத்தில் மெம்பர்கள் பிலியர்ட் ஆடுவதும், பேப்பர் வாசிப்பதும், சீட்டாடுவதுமாயிருக்கிறார்கள். அங்கு சுந்தரம் தனது நண்பர்களுடன் பணம் வைத்து சீட்டாடிக் கொண்டிருக்கிறான்].

சுந்தரம் :—தாமு, 50 ரூபா வைக்கிறேன்.

சீனுவாசன் :—நான் 100 ரூபா மேலே.

தாமு :—சீனு தைரியமாய் வைக்கிறானே.

சு :—200 ரூபாய், என்ன மேல்கொண்டு உண்டா?

சீனு :—நிறுத்திவிட்டேன் என்ன சீட்டு.

சு :—இரண்டு ஜோடி.

சீனு :—இரண்டு ஜோடி 3 கிங்.

தாமு :—சீனு ஜெயம்.

சிவ :—சுந்தரம் ரொம்பலூஸ் பண்ணுகிறான்.

சு :—பரவாயில்லை, பாய் ஒன்பெக் சீக்கிரம்.

தாமு :—உனக்குமட்டுந் தானா?

சு :—பாய் நாலு கொண்டுவா சீக்கரம். (சீட்டுபோட எடுத்துக்கொண்டு) 200 ரூபாய்.

சீனு :—300 ரூபா (பெக் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டே).

தாமு :—350 ரூபா.

சு :—50 என்ன பிச்சை 400 ரூபா.

சிவ .— நிறுத்தினேன்.

தாமு :—3 ஏஸ் ஒரு ஜோடி.

சு :—உனதுதான் ஜெயிப்பு.

சிவ :—இன்று சுந்தரத்திற்கு ஜெயிப்பேகாணும்.

சு :—மொத்தமாகசேர்த்து வாங்கிக்கொள்ளுகிறேன்.

சிவ :—டயமாச்சி போகலாம்.

தாமு :—சுந்தரம் லூஸ்பண்ணியிருக்கிறான் அவனைகேள்.

சீனு :—என்ன சுந்தரம்.

சு :—குளோஸ் செய்யுங்கள் தடையில்லை.

சிவ :—நாளைக்கு சுந்தரத்திற்கு வின்தான்.

சு :—தடையில்லாமல் (போகிறார்கள்.)

---

## காட்சி 3

### இடம் :—"பிரம்மானந்த விலாசம்"

[பங்களாவுக்கு வெளியே திருநெல்வேலி பெண்பிள்ளை ஜோஸியம் கூறுவதாய் சொல்லிக்கொண்டு செல்ல, அலமேலு என்னும் வேலைக்காரி, அவளை கூப்பிட்டு உள்ளே அழைத்துச் செல்லுகிறாள்].

அலமேலு :—இப்படி உட்காரு, அம்மா ! அம்மா !!

மீனாக்ஷி :—(உள்ளேயிருந்துவந்து) என்ன ?

அ :—ஐயாவே பத்தி ஜோஸியம் கேளுங்கம்மா !

மீ :—இவர்கள் சரியாகச் சொல்லுவார்களா ? ஜாதகம் பார்க்கத்தெரியுமா ?

ஜோ-பெண் :—ஆயீ ! ஆரோடம் சொல்லுவோம், கைபார்த்து சொல்லுவோம், சரியா நடக்கும் தாயீ.

அ :—என் தம்பிக்குக்கூட இந்தமாதிரி பெண்தான் சொன்ளுள், அப்படியே நடந்ததம்மா.

ஜோ-பெண் :—செல்லாது தப்பாது நடக்கும், நாங்கோ வருஷத்துக்கு ஒருதடவைதான் வருவோம், உக்காரம் மணி, கையெ காட்டுங்கோ.

மீ :—அவர் விஷயத்திற்கு என் கைப்பார்த்தால்.

ஜோ-பெண் :—ஆயீ கையைபார்த்தா, உங்க ஐயா சங்கதி பத்தி சொல்லும் லக்ஷ்மி.

அ :—சொல்லுவாங்கோ காட்டுங்கோ, சரியா கவனிச்சி சொல்லு.

ஜோ-பெண் :—தப்பு சொல்லமாட்டோம், போன வருஷம் உங்களெ போல ஒரு லக்ஷிமிக்கு சொல்லிப்போனேன் இப்போ பாத்து சந்தோஷப்பட்டு ஒரு சேலே கொடுத்தாங்கோ அம்மணி (கையை பார்த்து) ஆயீ மனசு ரொம்ப சங்கடம் அடைஞ்சி யிருக்குது, இந்த வூட்டில் துக்க சமாசாரம் நடந்திருக்கிறது. இப்போ ஒரு ஆறு புறந்த ஜீவனே பத்தி, தாமரையில் தண்ணிபோல் மனம் தத்தளிக்கிறது, உண்மையா ஆயீ.

மீ ;—உம்......

அ :—நிஜந்தான், பெரிய ஐயா இறந்து பூட்டாரு, சின்ன ஏஜமானெப்பத்தி மனசு ரொம்ப கஷ்டந்தான்.

ஜோ-பெண் :—இப்போ அவருக்கு பொல்லா கிரகம்புடித்து ஆட்டிவைக்குது.

மீ :—என்ன கெடுதி நேரும்.

ஜோ-பெண் :—ஆயீ! ஐயாவுக்கு உயிர்பயமில்லே, ஆனல் பொருள் நஷ்டமாகும், வியாஜியம் நடக்கும், மனுஷாள் விரோதமேற்படும், கடைசியில் சுகமடைவார் தாயீ.

மீ :—சுகமடைய எவ்வளவு காலமாகும்.

ஜோ-பெண் :—மூணுமாதம் போகணும் ஆயீ, அப்புறம் சுகமாயிருப்பார். ஆயீ வயத்தில் பெண் புறக்கும். மேலான பதவி பெறுவாய் அம்மணி (அதுசமயம் சுந்தரம் வருகிறன்.)

சு :—யார் இந்த பெண் ?

ஜோ-பெண் :—ஜோஸியம் சொல்லாது சாமி.

சு :—ஜோஸியமாச்சி, மண்ணாங்கட்டியுமாச்சி, போ வெளியே, மீனு! எத்தனை நாளா இந்த பயித்தியம் உனக்கு.

ஜோ-பெண் :—ஐயாவுக்கு கெட்ட கிரகம் இப்போ.

சு :—சரிதான் போ, அக்கபோர் சங்கதி தெரிஞ்சிக்கொண்டு கண்டபடி உளருகிறவர்களாச்சே, மரியாதையா வெளியே போ, (போகிறள்) மீனு! இவர்கள் நம் வாய் பிரப்பை கேட்டு சொல்லுகிறவர்கள், மூடாத்மாக்கள் இதை நம்புகிறார்கள். (திரும்பி பார்த்து) இது அலமேல் வேலையோ போ உள்ளே (போகிறள் அங்குள்ள ஆசனத்தில் அமர்ந்து) மீனு உன்னிடம் முக்கிய சங்கதி சொல்லவேண்டும்.

மீ :—(பக்கத்தில் உட்கார்ந்து) என்ன நாதா !

சு :—இதுவரையில் வீட்டின்பேரில் வாங்கக்கூடிய வரையில் கடன் வாங்கியாயிற்று.

மீ :—எவ்விதம் தீர்க்க யோசனை ?

சு :—நான் சீட்டாட்டத்தில் தோல்வியடைந்த பணத்தை மறுபடி ஆடி ஜெயித்தே தீர்த்துவிடுவேன் அதற்கு...

மீ :—அடகுவைக்க வேறு என்ன பொருளிருக்கிறது ?

சு :—உன்னிடமுள்ள நகைகள் தான்.

மீ :—அதையும் இழந்துவிட்டால் பிறகு ஜீவிப்பதெப்படி நாதா ?

சு :—என்ன புத்தியில்லாமல் பேசுகிறாய், தோற்கிறவன் எப்போதுமா தோல்வியடைவான் ?

மீ :—நமக்கு காலம் சரியாயிராததினால் சொல்லுகிறேன்.

சு :—ஏன் ! அந்த நாடோடி ஜோஸியக்காரிச் சொல்லிவிட்டாளோ, கட்டாயம் ஜயம் பெறுவேன், தடைசொல்லாமல் கொடு.

மீ :—சரி, அதற்குமேல் நான் என்ன சொல்லக்கூடும், ஈசனிருக்கிறார். (உள்ளே செல்லுகிறாள் பின் சுந்தரமும் செல்லுகிறான்.)

---

## காட்சி 4

### இடம் :—"பிரம்மானந்த விலாசத்தில் பூஜாக்கிரஹம்"

[மதுரை மீனாக்ஷி படத்திற்கு அலங்காரம் செய்து நைவேத்திய முதலியது வைத்து ஆராதனைச் செய்து.]

மீ :—(துதிக்கிறாள்)

"மைக்கார் குழற்பெண்வடிவாளைத் தென்னவன் மாமகளை
அக்காளையோன் பங்கிலாத்தாளை மாறங்கையாளவளைத்
திக்கார்தொழுங் கயற்கண்ணாளை ஓர்தினஞ்சேவைசெய்தால்
எக்காலமுமவர் சொர்க்காதி போகத்திருப்பவரே"

(சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து நின்று) இராஜ ராஜேஸ்வரீ! புவனேஸ்வரீ! அண்டினோரை ஆதரிக்கும் அகிலாண்டேஸ்வரீ! மாசற்ற மங்கையர்களை மகிழச் செய்யும் மகேஸ்வரீ! அடியாளின் பதிக்கு நற்புத்தி பாலித்தருளவேண்டும். (அலமேலு நிற்பதை கவனித்து) என்ன அலமேலு.

அ:—அம்மா, ஐயாவைப்பார்க்க இரண்டு பேர் வெளியே காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மீ:—வெளியே போயிருப்பதாக சொல்லி அனுப்புகிறது தானே.

அ:—சொன்னேன்......அவர்கள்.........

மீ:—என்ன சொன்னார்கள்.

அ:—ஒரு சௌகார், கோர்ட்டு அமீனாவுடன் வந்திருப்பதாக உங்களிடம் சொல்லச் சொன்னார்கள்.

மீ:—உம், சரி, யாவும் அம்பிகையின் அருள் (செல்லுகிறாள்).

---

## காட்சி 5

இடம்:—ஹால்.

[கம்பீர்லால் சௌகாரும், அமீனாவுடன் அமர்ந்திருக்கிறார்.]

மீ:—நமஸ்காரம் தாங்கள் எதற்காக அவரை காணவந்தீரோ?

க:—அம்மா, அவர் இந்த வீட்டின்பேரில் வாங்கிய கடனுக்கு வாரண்ட்டு எடுத்து, கோர்ட்டு அமீனாவுடன் வீட்டை ஜப்திசெய்ய வந்திருக்கிறேன்.

மீ:—தாங்கள் இன்னும் சில மாதங்கள் பொருத்து பார்க்கலாகாதா?

க:— அம்மா! எவ்வளவோ நயத்திலும், பயத்திலும், கேட்டுப் பார்த்தேன், இந்த தாழ்மையான பதில்கூட சொல்வதில்லை.

மீ:— அவ்வித குணமேற்பட்டது அவருடைய கிரகத்தின் லீலையே. (ராமனைப் பார்த்து) நீ உடனே ஐயாயிருக்குமிடஞ்சென்று, இவர்கள் வந்திருக்கும் சேதியை தெரிவித்து கையுடன் அழைத்துவா. (போகிறான்) ஐயா சௌகார் தாங்கள் செய்ததைப்பற்றி சிறிதும் மனவருத்தமில்லை, எங்களுக்கு ஒரு உபகாரமட்டில் செய்ய வேண்டுகிறேன்.

க.— என்ன செய்யவேண்டும்?

மீ:— ஜப்த்தி செய்தபிறகு, நாங்கள் வேறு வீடுபார்த்து செல்லும் வரையில், இவ்வீட்டிலிருக்கும்படி உத்திரவு செய்யவேண்டும்.

க:— அம்மா! உங்களிஷ்டப்படி செய்ய, கோர்ட்டு சட்டம் இடந்தருமாவென்று யோசிக்கிறேன்.

மீ:— அமீனா அவர்களுக்குத் தெரிந்திருக்கலாமே.

க:— ஏனையா அமீனா அவ்விதம் செய்யலாமா?

அ:— சுவாதீனமான பிறகு, இவர்களிடமிருந்து வாடகை அக்கிரிமெண்டு பெற்று இருக்கச் செய்யலாம்.

க:— அவ்விதம் செய்ய சம்மதமா?

மீ:— வாடகை......தற்காலம்:........

க:— 3 மாதத்திற்குள் காலி செய்வதாயிருந்தால் ஒன்றும் கொடுக்கவேண்டாம். (அது சமயம் சுந்தரம் வருகிறான்) மிஸ்டர் சுந்தரம் நமஸ்காரம்.

சு:— அயோக்கிய காரியஞ் செய்துவிட்டு நமஸ்காரம் வேறு?

க:— என்ன கோவமா பேசுறீங்கோ சார்.

சு :—சாருமாச்சி, குழம்புமாச்சி.

க :—ஐயா, என் பணத்திற்குத்தானே செய்தேன்.

சு :—உன் பணத்தை கொடாமல் போய்விடுவேனே?

க :—இதுவரையிலும் வட்டியில்கூட பைசா கொடுக்கவில்லையே. அப்புரம் கடன் மசோதா சட்டப்படி ஏற்பட்டுவிட்டா நஷ்டப்படுவேனு.

சு :—வாங்கின பணத்துக்கு மோசம் ஏற்படாதே.

க :—வட்டி பணம் உங்கள் பாட்டன் கொடுப்பாரு.

சு :—மோசம் செய்யப்பட்டவனல்ல, ஊரை விட்டு ஊர்வந்து ஊராரை மோசம் செய்யும் உங்களைப்போலல்ல.

அ :—ஐயா, அதிக பேச்சு வேண்டாம்.

க :—அமீனு, கோர்ட்டு சட்டபடி நடத்து, கூப்பிடு ஆட்களை.

[இருவரும் ஆட்களுடன் உள்ளே செல்லுகிறார்கள் மீனாக்ஷி கூடசெல்கிறாள் சுந்தரம் அவ்விடத்திலேயே உட்கார்ந்திருக்கிறான் சாமான்களை எடுக்கிறார்கள்.]

மீ :—தயவுசெய்து நான் பூஜிக்கும் மீனாக்ஷியம்மன் படத்தைக் கொடுக்கக் கூடுமா?

க :—அமீனு! கொடு, அம்மா உங்களுக்குவேண்டிய உடைகளை எடுத்துக்கொள் (சுந்தரம் வந்து கவனிக்கிறான்).

மீ :—சௌகார் அவருடைய உடுப்புகளும் தயவு செய்ய வேண்டும்.

க :—அது முடியாது.

சு :—மீனு! எனக்காக ஒன்றும் கேட்க வேண்டாம்.

மீ :—(சுந்தரத்தின் உடுப்புகளில் சிறிது எடுத்துக்கொண்டு) என்பொருட்டு தயவு செய்யவேண்டும்.

க :—சரி. உனக்காக கொடுக்கிறேன். ஐயா! அமீனு எல்லாம் முடிந்ததா?

அ :—முடிந்தது. வீட்டை சீல் செய்ய வேண்டியதுதான்.

க :—செய்.

அ :—ஐயா! தங்கள் மனைவியுடன் வெளியே செல்லுங்கள். (சுந்தரம் செல்ல மீனாக்ஷியும் துணி மூட்டையுடன் விசனத்துடன் செல்ல, அமீனு வீட்டை பூட்டி சீல் வைத்துச் செல்லுகிறான்.)

---

## காட்சி 6

இடம் :—திருவல்லிக்கேணியில் சுந்தரம் குடியிருக்கும் அறை.

[ஒரு பாயின்மீது சுந்தரத்துடன் மீனாக்ஷி உட்கார்ந்து]

மீனாக்ஷி :—நாதா! இந்த நிலைமைக்கு வந்தும் தாங்கள் துற் பழக்கத்தை விட்டபாடில்லையே, சூதாட்டத்தால் பாண்டவர்கள் பரதவித்ததையும், நளச் சக்கிரவர்த்தி நாட்டை யிழந்ததையும், குடியால் கோடான கோடி பேர் ஒழுக்கந் தவறி உலகில் இருப்பதை நன்குணர்ந்தும், என்போன்ற மங்கையர்போலிருப்பது தகுதியா.

சு :—உபதேசம் போதும். இப்போது எனக்கு பணம் தேவை.

மீ :—நாதா! உள்ளதை யிழந்தாயிற்று, இனி கொடுக்கக் கூடிய நகை ஒன்றுமில்லையே.

சு :—(கவனித்து) உன் கழுத்திலணிந்திருந்த தங்க சங்கிலி எங்கே?

மீ :—மன்னிக்கவும். அதை விற்று சிறிய தோடு வாங்கிக் கொண்டு, பாக்கி பணத்தை 3 மாத வாடகை பாக்கிக் காக வைத்திருக்கிறேன்.

சு :— சரி ! அப் பணத்தை கொடு.

மீ :— வீட்டுக்காரருக்கு இன்று கொடுப்பதாக சொல்லி யிருக்கிறேனே,

சு :— அரிச்சந்திரன் வாக்கோ. பிறகு கொடுக்கலாம்.

மீ :— நாதா ! நாம் பட்டினியாக யிருந்தாலும், குடியிருக்கு மிடத்தையாவது காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா ?

சு :— அதைப்பற்றி பிறகு யோசிக்கலாம், இன்று கட்டா யம் ஜெயம்பெற்று வருகிறேன்.

மீ :— மீனாக்ஷி தேவி ! நீ தான் துணைபுரியவேண்டும். (சிறிய பேழையை திறந்து ரூபா 21 கொடுக்கிறாள்.)

சு : (பெற்றுக்கொண்டு) ஜெயம் பெறவேண்டுமென சுவா மியை வேண்டிக்கொள். (போகிறான்.)

மீ : அம்பிகா ! இன்னும் எவ்வாறு சோதிக்க உன் கிரு பையோ. வாடகைக்கு என்ன பதில் சொல்லுவது. தவணை தவறினால் பிறகு என் வார்த்தையை நம்ப மாட்டார். (யோசித்து) சரி. திருமங்கல்யத்தோ டிருக்கும் பொன் சரடை விற்று கொடுப்பதே நலம்.

[திருமங்கல்யத்தை ஒரு கயிற்றில் சேர்த்து அணிந்துக் கொண்டு பொன் சரடை எடுத்து]

இச் சிறிய பொருளையும் இழக்க நேர்ந்ததா ?

வீட் : (வந்து) அம்மா! அம்மா!

மீ : அண்ணா ! வாருங்கள் (எழுந்து) வாடகைக்காக வைத் திருந்த பணத்தை சிலவுக்காக அவர் பெற்றுச் சென் றார். இப்பொருளை தயவு செய்து தாங்களே விற்று சேரவேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்.

வீ :— இவ் விஷயம் அவருக்குத் தெரியுமோ. பிறகு உங் கள் மீது கோபித்துக்கொள்ளப் போகிறார்.

மீ :— அண்ணா ! இது விஷயத்திற்காக செய்தால் கோபித்

துக் கொள்ளார் தயவு செய்யுங்கள். (சரடை கொடுக்கிருன்.)

வீ :—(பெற்றுக்கொண்டு) அம்மா! நீங்கள் அதிக வாடகை கொடுக்கத்தக்க வருமானமுமில்லை, எனக்கும் இந்த அறை தேவை, தயவு செய்து ஒரு மாதத்திற்குள் காலி செய்துவிடுங்கள். ஒரு மாத வாடகையும் கொடுக்கவேண்டாம்.

மீ :—அண்ணு! தங்கள் சம்மதம்போல் செய்கிறேம். (போகிருர்.) நினைத்தவாறே முடிந்தது.

---

## காட்சி 7

இடம் :—சர். முனுசாமி சத்திரம் எழும்பூர்.

[சத்திரத்து தாழ்வாரத்தில் மீனுக்ஷி வாந்தி எடுக்கிருள். அங்கு தங்கியிருக்கும் ஒரு வயதான மாது கண்டு அருகில் வந்து]

மர்து :—அம்மா! குழந்தே! என்ன உடம்புக்கு ஜுரமா?

மீனுக்ஷி :— இல்லையம்மா.

மா :—ஏன் வாந்தி யெடுக்கிருய்?

மீ :—இரண்டு தினங்களாய் ஆகாரமில்லை, அதோடு......

மா :—முழுகாமலிருக்கிருயா?

மீ :—ஆம், நான்குமாதமாய்......

மா :—ஐயோ, இந்த கஷ்டத்தில் இந்த பீடை எதற்கு, உன் புருஷன் எங்கே?

மீ :—வெளியே உட்கார்ந்திருக்கிருர்,

மா :—இந்த சமயத்தில் எங்காகிலும் போய் சாப்பாட்டிக்கு, வழி தேடி காப்பாற்ற வேண்டாமா! (அது சமயம் சுந்தரம் வந்து கவனித்து.)

சு :—மீனு ! ஏன் வாந்தி யெடுக்கிறாய்.

மீ :—ஒன்று மில்லை.

மா :—ஐயா. இப்படிக்கூட கர்பிணியை பட்டினி போடலாமா ? (சுந்தரம் பதில் கூறாது நிற்கிறான்.)

மீ :—நாதா ! தயவு செய்து தங்கள் நண்பர் எவர்களிடமாவது சென்று, ஜீவனத்திற்கு தொழில் ஏதாகிலும் பெற முயற்சியுங்கள். தற்சமயம் பொருளுதவியாகிலும் பெற்று வாருங்கள்.

சு :—சரி ! சென்று வருகிறேன். (போகிறான்.)

மா :—அம்மா ! என்னுடன் சாப்பிடு, எழுந்து வா.

மீ :—வெளியே சென்றவர் வரட்டும் அம்மா.

மா :—அதுவரையில் நீ பட்டினியிருந்தால் களைப்பு ஏற்படும் வா (மீனாக்ஷியின் கையை பற்றி அழைத்துச் செல்லுகிறாள்.)

## காட்சி 8

### இடம் :—நல்லதம்பி பங்களா, கீழ்பாக்கம்.

[நல்லதம்பி என்றவர் ஒரு சோபாவில் படுத்துக்கொண்டு பேப்பர் வாசித்துக் கொண்டிருக்கும் சமயம் ஒரு வேலையாள் வருகிறான்.]

வேலையாள் :—எஜமானரைப் பார்க்க ஒருவர் வந்திருக்கிறார்.

நல்லதம்பி :—யாரது, பெயரென்ன ?

வே :—கேக்கலீங்கோ இதோ கேட்டுவரேன்.

ந :—நான் சொன்ன பிறகா மடையா, சரி வரச்சொல். (வேலைக்காரன் போகிறான் பேபர் வாசிக்கிறான் சுந்

தாம்வர பார்த்து) ஹோ, நீயா! உட்காரு உடம்புக்கென்ன இப்படி இளைத்திருக்கிறாய்?

சு :—(உட்கார்ந்து) ஒன்றுமில்லை மன வியாகூலந்தான்.

ந :—ஆம் பாவம் பாதர் (Father) இறந்த கஷ்டத்தோடு, பாங்கிலுள்ள பணமும் போய்விட்டது. இப்போ என்ன செய்கிறாய்?

சு :—பாக்கியிருந்த பொருளையும் இழந்து ஜீவனத்திற்கே கஷ்டப் படுகிறேன்.

ந :—உட்கார்ந்து சாப்பிட்டால் உள்ளதும் போகவேண்டியதுதான், எங்காகிலும் வேலை பார்க்கிறதுதானே?

சு :—அதை நாடி தான் இங்கு வந்தது.

ந :—தற்காலம் வேலை குதிரை கொம்பாயிருக்கிறதே. சொத்துயிருக்கும்போதே கவனித்திருக்கவேண்டும். நகை நட்டுயில்லையோ?

சு :—இருந்தது அதுவும்.........

ந :—எப்படி போச்சி?

சு :—டிலைட்புல் கிளப்பில் சேர்ந்ததினால் இழக்க நேர்ந்தது.

ந :—ஹோ, காம்பிலிங் ஹௌஸில் சேர்ந்தா பேஷ்.

சு :—இரண்டு தினங்களாய் மனைவியுடன் பட்டினி.

ந :—நீ சாப்பிட்டுவிட்டு கொஞ்சம் சாதம் யெடுத்துப்போ.

சு :—ஏதாகிலும் மணி உதவி புரிந்தால்......

ந :—மணியா! ஏன் சூதாட்டத்திற்கா?

சு :—இல்லை.

ந :—பெக்குக்கு தேவையோ, என்னிடம் ஒத்த காசும் எதிர்ப்பார்க்காதே, பாத்திரமறிஞ்சி பிச்சையிடவேண்டும், உனக்கு கொடுத்தால் பாவந்தான் சம்பவிக்கும்.

சு:—இதுதானு நண்பனுக்கு அழகு?

ந:—எனக்கு புத்தி புகட்ட வேண்டாம், நீ புத்தியோடு பிழை போ! போ!! இங்கு நில்லாதே உன் தரித்திரம் இங்கு தங்கிவிடப்போகிறது.

சு:—இவ்வளவு கடுஞ் சித்தமுடையவனு யிருப்பாயென்று நினைக்கவில்லை. (போகிருன்.)

ந:—கொடுக்காவிட்டால் கெட்டவன் என்று சொல்ர வழக்கந்தானே.

---

## காட்சி 9

இடம்:—வீதி.

[சுந்தரம் மனம் கலங்கினவனுய் சிந்தித்தவண்ணம் வரும்போது மோட்டார் வண்டி ஹாரன்செய்துக் கொண்டு திரும்புவதை கவனியாது அகப்பட்டு கீழே விழுந்து தலையில் அடிப்பட்டு பிரக்ஞையற்றிருக்கிருன், உடனே டிரைவர் காரை நிறுத்தி இறங்குகிருன், நடமாடும் ஜனங்கள் கூடுகிறது.]

1 ஒருவன்:—டிரைவரை ஒதையுங்கோ.

2 ஒருவன்:—அவன் ஹாரன் செய்துக் கொண்டுதான் திரும்பினுன்.

3 ஒருவன்:—மானத்தை பார்த்துக்கொண்டு வந்தா, அவன் என்ன செய்வான் பாவம்.

4 ஒருவன்:—டிரைவர் பசங்களுக்கு கர்வம் கவனிச்சி போரதில்லே.

2 ஒருவன்:—உள்ளே சொந்தக்காரரில்லையா?

5 ஒருவன்:—காலிவண்டிதான்.

6 ஒருவன் :—ஆளு செத்தானு, பொழச்சானு, அத்தே பாருங்கையா.

3 ஒருவன் :—சாகலே, உயிரிருக்குது. (பீட் கான்ஸ்டேபில் வருகிறான்.)

கான்ஸ்டேபில் :—ஒத்துங்கையா. (உடனே ஆளை தூக்கி வண்டியில்போட்டு) சார், இதைப் பார்த்த உங்களில் சாக்ஷிகள் வேண்டும்.

1 ஒருவன்:—எங்க வேலைவிட்டு இதுக்கு யார் திரியமுடியும். (போகிறான்.)

2 ஒருவன் :—என் அட்ரஸ் எடுத்துக்கோ கண்ணபிரான் 32 சாமிபிள்ளை வீதி, சூளை.

கான்ஸ் :—(எழுதிக்கொண்டு) உங்கள் அட்ரஸ் சொல்லுங்க சார்.

5 ஒருவன் :—நான் சாயங்காலம் கொயம்புத்தூருக்கு போறவன்.

4 ஒருவன் :—சரி, என் அட்ரஸ் நோட் பண்ணிக்கோ, கோதண்டராம் K. S. கோபதி நாராயண செட்டி ரோட், மாம்பலம்.

கான்ஸ் :—(எழுதிக்கொண்டு) 2 போதும் சார், (தானும் காரில் யேறிக்கொண்டு) 'ஜனரல் ஆஸ்பத்திரிக்கு போ' (கார் போகிறது.)

6 ஒருவன் :—புறப்படச்சே எந்த முண்டச்சி வந்தாளோ பாவம் (கூட்டம் கலைந்து விடுகிறது.)

## காட்சி 10

இடம் :—சர். முனுசாமி சத்திரம்.

[திருப்பதிக்கு பிரார்த்தனை செலுத்துபவர் வருகிறார்கள். காரியஸ்தன் மீனாக்ஷியிருக்கும் அறைக்குச் சென்று].

காரியஸ்தன் :—ஐயா! ஐயா!!

மீனாக்ஷி :—(வெளியே நின்று) அவர் இல்லிங்கோ.

கா :—அம்மா, நீங்கள் வந்து 3 தினத்திற்குமேலாச்சு காலி பண்ண வேண்டும்.

மீ :—ஐயா! நேற்று வெளியே சென்றவர் இன்னும் வரவில்லை.

கா :—எங்கு சென்றார்? அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?

மீ :—வேறயிடம் செல்ல தெரிந்தவர்கள் ஒருவருமில்லை, அவர் வருமளவும் தங்க உத்திரவு அளிக்கவேண்டும்.

கா :—அவ்விதம் செய்ய எனக்கு அதிகாரமில்லை, எஜமானர் உத்திரவு பெற்றுக்கொண்டாலிருக்கலாம்.

மீ :—தங்கை போல் பாவித்து, என்னுடைய நிலைமையை தெரிவித்து தங்கும்படிச் செய்யவேண்டும்.

கா :—சொல்லிப் பார்க்கிறேன். அதோ அவரும் வந்துவிட்டார். (சர். முனுசாமி மகன் மாதவன் வர நமஸ்கரிக்கிறான்.)

மாதவன் :—என்ன, கூட்டம் அதிகமாயிருக்கிறது?

கா :—திருப்பதிக்கு போகிறவர்கள், நாளை காலையில்போய் விடுவார்கள்.

மா :—3 தினத்திற்குமேல் எவரும் தங்குவதில்லையே?

(மீனுக்ஷி கதவு மறைவாக நின்று தலையை நீட்டுகிறுள் கவனித்து) இவர்கள் யார்?

கா :—இந்த அம்மாள் புருஷனோடு வந்து தங்கினார்கள். நேற்று வெளியே சென்றவர் இன்னும் வரவில்லையாம்.

மா :—பெண் பிள்ளையை இங்கு விட்டு நேற்று சென்ற மனுஷனு இன்னும் வரவில்லை, சொந்த புருஷந்தானே?

கா :—ஆம், இவர்கள் வந்து இன்று நாலு தினங்களாகிறது. புருஷன் வரும்வரையில் தங்கும்படி உத்தரவு வேண்டுமாம்.

மா :—அம்மா! அவ்விதம் உங்களுக்கு கொடுத்தால் பிறகு அதே வழக்கமாய்விடுமே.

மீ :—தங்க வேறுயிடம் கிடையாது, தயவுசெய்தால் மெத்த புண்ணியம்.

மா :—எந்த ஊர்! உங்கள் மனுஷாள் இந்த ஊரிலில்லையா?

மீ :—இந்த ஊர்தான், கால வித்தியாசத்தால் இந்நிலைமை ஏற்பட்டது, பந்துக்களிடம் செல்ல பிரியமில்லாது இங்குவந்தோம். அவர் சினேகிதரிடம் உதவிபெற சென்றவர் இன்னும் வரவில்லை. காரணம் தெரியாது கலக்கமுற்றிருக்கிறேன்.

மா :—ஐயோ, கேட்க பரிதாபமாயிருக்கிறது, அம்மா நீங்கள் என் பங்களாவில் வந்திருங்கள், நான் அவர் தகவலை விசாரித்து அழைத்துவரச் செய்கிறேன்.

மீ :—தங்கள் இறக்கத்திற்கு வந்தனம். என்றல் தங்களுக்குச் சிரமம் வேண்டாம். இங்கிருக்க உத்தரவு அளித்தாலே போதுமானது.

மா :—ஒருகால் இங்குவந்தால் தகவல்சொல்லி அனுப்ப உத்தரவு செய்கிறேன், எதற்கும் யோசிக்கவேண்டாம்.

கா :—நீங்கள் எஜமானருடன் செல்லுங்கள். அவர் வந்தால் நானே அழைத்துக்கொண்டு வருகிறேன்.

மா :—அபிப்பிராயம் எப்படி ?

மீ :—அண்ணு ! தங்கள் உத்திரவுப்படி நடக்கிறேன்.

மா :—ஐயா, இவர்கள் சாமானை காரில் கொண்டுபோய் வையும்.

மீ :—சிறிய பெட்டிதான், நானே எடுத்துக்கொண்டு வருகிறேன். (உள்ளே செல்லுகிறுள். அது சமயம் மாதவன் காரியஸ்தரிடம் இரகஸியமாய் ஏதோ சொல்லுகிறுன், அவனும் தலையை அசைக்கிறுன்.)

மா :—வாம்மா (மாதவன் செல்ல பின்னேடு மீனுக்ஷியும் சென்று காரில் ஏறிக்கொண்டு போகிறுர்கள்.)

---

## காட்சி 11

இடம் :—சர். முனுசாமி பங்களா, அடையார்.

[மாதவன் தன்னுடைய அறையில் அமர்ந்துக்கொண்டிருக்கிறுன்.]

மாதவன் :—போய் ! கோமளத்தை கூப்பிடு, (போகிறுன்) அம்மங்கையின் நோக்கத்தை எவ்விதம் அறிந்தாளோ தெரியவில்லை, என்ன அழகு தேவகன்னிகை போலல்லவோ யிருக்கிறுள். கஷ்டத்தில் பேசும்போதே கிளி கொஞ்சுவது போலிருக்கிறது. அன்பாய் பேசினுல் அதற்கு எதையும் ஒப்பிட முடியாது. (கோமளம் வருகிறுள்) என்ன கோமளம் காயை கனியாக்கினுயா ?

கோமளம் :—நோக்கத்தை தெரிந்துக் கொள்வது பிரம்ம பிரயத்தனமாயிருக்கிறது. உங்களைப் பற்றி எவ்வளவு

புகழ்ந்து பேசவேண்டுமோ அவ்வளவு பேசி யிருக்கிறேன்.

மா :—சிதம்பரத்துப் பிள்ளைக்கு திருவாசகம் ஓதவேண்டுமா, முடிவு என்ன?

கோ :—பெரிய குடும்பத்திலிருந்தவளாக தெரிகிறது, நாயகனைப்பிரிந்து திக்கில்லாதிருக்கிறாள். உங்கள் பிரிய வார்த்தையால் இணங்கும்படிச் செய்ய வேண்டும்.

மா :—சரி, இங்கு அழைத்துக் கொண்டுவா, (போகிறாள்) இச்சமயம் தவறினால் வேறு சமயம் வாய்க்காது, வீட்டில் வந்து விட்டால் அபலமாய் முடிந்துவிடும். (மீனாக்ஷியுடன் கோமளம் வருகிறாள்) அம்மா சாப்பிட்டாயா?

மீ :—தங்கள் தயவால் ஆச்சுது அண்ணா! அவர் தகவல் ஏதேனும் புலன் கிடைத்ததா?

மா :—எல்லா பேப்பர்களுக்கும் எழுதி அவர் தகவலை தெரிந்து சொல்லுபவர்களுக்கு இனாம் 500 ரூபாய் கொடுப்பதாயும் பிரசுரம் செய்யவும் சொல்லியிருக்கிறேன். என் ஆட்களை தேடிப் பார்க்கும்படிக்கும் அனுப்பியிருக்கிறேன். கவலைப்படாதே, சீக்கிரத்தில் வரலாம், கோமளம் காப்பி போடு வெளியே போக வேண்டும். (கோமளம் போகிறாள்.)

மீ :—அண்ணா, இச்சிறியவளால் தங்களுக்கு மெத்த கஷ்டம். வீட்டில் மதனி முதலியோர் எப்போது வருவார்கள்?

மா :—உன் விஷயத்தை பூர்த்தி செய்துவிட்டு, பிறகு நான் போய் தான் அழைத்து வரவேண்டும். உங்களிருவருக்கும் மனஸ்தாபமுண்டா?

மீ :—ஒன்றுமில்லை, ஜீவனத்திற்காக கஷ்டப்படுந் துயரந் தான்.

மா :—அதை உத்தேசித்து உன்னை நிராகரித்து சென்றிருக்கக்கூடுமோ ?

மீ :—அவ்விதம் செய்யப்பட்டவரல்ல.

மா :—பிறகு ஆபத்து ஏதேனும் நேர்ந்திருக்கக் கூடுமோ ?

மீ :—எவ்விதம் சொல்லமுடியும் அண்ணு.

மா :—அவ்விதம் நேர்ந்தால் என்ன செய்ய உத்தேசம் ?

மீ :—கடவுள் தான் துணை புரிய வேண்டும்.

மா :—கடவுள் நேராக செய்கிறாரா ! ஒருவரைக் கொண்டு தானே நன்மை செய்கிறார்.

மீ :—உண்மை.

மா :—ஒருவித கஷ்டமும் அனுபவிக்காதிருக்க கடவுள் என்னையே ஏவினால் பிரியப்படி நடக்கலாமல்லவோ ?

மீ :—பிரியப்படி என்றால் .....?

மா :—எவ்வித பிரியத்திற்கும் இணங்கி நடப்பது தான்.

மீ :—(முகம் மாறுதலடைந்து) தாங்கள் வாசித்தவர்கள், பெரிய குடும்பத்தில் பிறந்தவர்கள். ஆதரவற்றவர்களை தங்கைபோல் பாவித்து காப்பாற்றுவதைவிட்டு தவறான நோக்கங் கொள்ளலாமா ?

மா :—காரிகைகளை காப்பாற்றும் கருணையில் இதுவும் ஒன்று தானே.

மீ :—பரஸ்திரீகமனம் பஞ்சமாபாதக தொழிலல்லவா ?

மா :—சுகஜீவியாய் உன் வாழ்நாட்களைப் போக்கக்கருதியே சொல்லுகிறேன், இணங்கினால் நன்மை உண்டு.

மீ :—காமக்குரோதத்தினால் மன்னாதி மன்னர்களும் மாண

மிழந்ததை கேட்டதில்லையா! ஸ்திரீகளுக்கு கற்பே மோக்ஷத்திற்கு உரித்தானதல்லவா?

மா :—உன்மீது காதல்கொண்ட எனக்கு நீ சொல்லும் வார்த்தைகள் செவிடன் காதில் சங்கு சப்திப்பது போலேயாகும். இணங்கினால் நன்மை உண்டு, இல்லையேல், பலாத்காரம் செய்ய நேரும்.

மீ :—(சிறிது நேரம் மௌனமாயிருந்து) சகல செல்வாக்கும் பொருந்திய தங்கள் வாக்கை திரஸ்கரித்தால், எவ்வித நன்மையையும் அடையப்போகிறதில்லை.

மா :—பேஷ்! இன்றே புனிதனானேன். பிரியத்தை எப்போது எதிர்பார்க்கலாம்?

மீ :—என்னுடன் வேலைக்காரர்களில்லாதபடி எனது படுக்கையில் தனித்திருக்கச்செய்தால், எவரும் அறியாது காரியசித்திபெறலாம்.

மா :—சரி, உன்பிரியப்படியே செய்கிறேன், இரவு 1 மணிக்கு. (போகிறான்.)

---

## காட்சி 12

இடம் :—மீனாக்ஷி படுத்திருக்கும் அறை.

[மீனாக்ஷி அறையின் கதவை தாளிட்டுக் கொள்ளுகிறாள்].

மீ :—திக்கற்றவர்களை காத்திடும் திரிபுரசுந்தரி! செல்வத்தையிழந்து, பதியைப்பிரிந்து, பரதவிக்கும் பாவையை பாதுகாக்கலாகாதா, நானும் உம்மைப்போல் பெண் அல்லவா, கடைக்கண்செலுத்தி கற்பழியாது காத்திடலாகாதா, என் கற்பை அழிக்க கபடமாய் அழைத்து வந்த சண்டாளன், துரோகி, பஞ்சமா பாதகனிட

மிருந்து எவ்வாறு என் கற்பை பாதுகாப்பது, அனுசூயைதேவி, மும்மூர்த்திகளையும் குழந்தைகளாக்கியது கற்பினாலல்லவா, கண்ணகிதேவி மதுரையை அழித்தது கற்பினாலல்லவா, அவ்வித கற்பை நான் காத்துக்கொள்ள வேண்டும். (மணி 11 அடிக்க கவனித்து) ஹா! மணி பதினொன்று அடித்துவிட்டதே. பாதகன் வரும்காலம் நெருங்கிவிட்டதே என் செய்வேன், (சுற்றிபார்க்க மேஜைமீதுள்ள கத்தியை கவனித்து ஆவலுடன் அதை எடுத்து) அறிய சிறிய வஸ்துவே என் ஆவியைபோக்கி கற்பை காத்திடும் கருவியே. (யோசித்து) தற்கொலை புரிந்துகொண்டால், அந்தோ! ஆயுளுள்ளவும் அவரை போஷிக்காது இறப்பேனேயானால், கற்புடையாளுக்கு அழகல்லவே, ஜகதீஸ்வரி! அலையிலகப்பட்ட துரும்புபோல் தவிக்கும் என்னை துன்பத்தினின்று விலக்கலாகாதோ! (அங்குள்ள ஜன்னலிருக்குமிடம் சென்று கவனித்து) இவ்வழியாக வெளியேகுவதே உத்தமம். எவ்விதம் இறங்குவது (யோசித்து பார்த்து) ஆம்.

[உடனே அங்குள்ள எலக்டிரிக் கம்பிகளை கத்தியால் வேண்டியவரையில் அறுத்து ஜன்னல் நடு சட்டத்தில் கட்டி அதின் உதவியால் கீழே யிறங்கி எவருமறியாது தோட்ட வழியாக வெளியே சென்று மறைகிறாள். மணி ஒன்று அடிக்க மாதவன் தன் அரையிலிருந்து எவருமறியாவண்ணம் மீனாக்ஷி அரையிடம் வந்து கதவு தாளிட்டிருக்க மெதுவாய் தட்டியும் திறவாததினால் பலத்தைக் கொண்டு திறக்க முயலும்போது அங்கு நித்திரை புரிந்துக் கொண்டிருந்த போயீ பயந்து எழுந்து.]

**போயி** :—ஐயா! தொங்கா! தொங்கா!! (எழுந்து ஓடுகிறான்).

ஒரு ஆள் :—பிடி! பிடி!! உடாதே (மாதவனைப் பிடித்துக் கொண்டு) விளக்கே போடு (ஒருவன் விளக்கின் சுச்சி போட எறிய வில்லை).

மா :—அடே நான் திருடனல்ல விடுங்கள்.

ஒ :—தப்பிச்சிக்க பொய் சொல்ருன் உடாதிங்கோ.

மா :—நான் எஜமாண்டா.

ஒ :—எஜமான் கொரலுதாண்டா (அதற்குள் ஒருவன் டார்ச் லைட்டுடன் வருகிருன் மாதவன் என்பதை அறிந்து விலகி நிற்கிருர்கள்).

மா :—அந்த பெண் ஏதோ சூது செய்திருக்கிருள் கதவை உடையுங்கள்.

ஒ :—எந்த பெண் ?

ஒ :—ஜாடைக் காட்டுகிருன்.

[எல்லோருமாக சேர்ந்து கதவை உடைத்து திறந்து உள்ளே சென்று பார்க்க நடந்த விஷயத்தை தெரிந்துக்கொண்டு விழிக்கிருர்கள்.]

மா :—ஏதாகிலும் திருடுபோய்விட்டதா போய் பாருங்கள், ஒருவன் போய் தோட்டக்காரனை அழைத்துவாருங் கள். (போகிருர்கள் கோமளம் வருகிருள்) ஏமாத்தி ஓடி விட்டாளே!

கோ :—சந்தேகித்தேன், (தோட்டகாரன் வருகிருன்).

மா :—டே, தோட்டவழியா யாராகிலும் வெளியே போனுர் களா ?

தோ :—இல்லிங்கோ எசமா.

கோ :—அவன் தூங்கு மூஞ்சியாச்சே.

தோ :—இப்போதான் கண்ணே மூடினே சாமி.

ஒருவன் :—(வந்து) ஒன்றும் திருடு போவலிங்கோ.

மா :—நல்ல காலம். உபகாரஞ்செய்யபோக இவ்விதம் எல்லோரையும் அலரவைத்து ஓடிவிட்டாள்.

கோ :—முன் பின் தெரியாதவர்களுக்கு உதவி செய்யவே கூடாது.

மா :—இதை யாருக்கும் வெளியிடவேண்டாம்.

கோ :—அசட்டு பிள்ளை என்று நினைக்கமாட்டார்களா. ஜாக்கிறதை வெளிவந்தால் சோத்துவாயில் மண்ணுதான், போங்கோ (எல்லோரும் போகிறார்கள்).

---

## காட்சி 13

இடம் :— ஜனரல் ஆஸ்பத்திரி.

[அனேக நோயாளிகள் படுத்திருக்க சுந்தரமும் தலையில் கட்டுடன் ஓர் படுக்கையில் படுத்திருக்க டாக்டர் வருகிறார்].

சுந்தரம் :—டாக்டர் சார்! என் மனைவிக்கு தெரிவித்தீர்களா?

டாக்டர் :—மீனாக்ஷி என்ற பேர்வழி அந்த சத்திரத்தில் எவருமில்லையென்று தெரிவித்து விட்டார்களாம்.

சு :—ஹா! அப்படியா! நான் வரவில்லையென்று கலக்கத்துடன் எங்கு தேடிச் சென்றாளோ?

டா :—உங்கள் மனுஷாள் வீட்டிற்கு போயிருக்கலாம்.

சு :—சார்! எங்களுக்கு மனுஷாள் ஒருவருமில்லை, என்ன ஆனாளோ ?

டா :—வருத்தப்படாதே கிடைப்பாள்.

சு :—எப்போது என்னை டிஸ்ஜார்ஜ் செய்வீர்கள்?

டா :—ஒரு வாரமாகும். எங்கு வேலை செய்கிறாய்?

சு :—வேலையில்லாமல் கஷ்டப்பட்டு சத்திரத்தில் தங்கியிருந்தோம்.

டா :—மில்டிரியில் ஏன் சேரக்கூடாது?

சு :—மனைவியின் கதி என்னவாவது?

டா :—ஏன், உன் சம்பளத்தை அனுப்பினால் நீ வருமளவும் ஜீவித்துக்கொண்டிருக்கிறாள்.

சு :—என்னை எடுத்துக் கொள்வார்களா ?

டா :—நான் சர்டிபிகேட் கொடுத்து சிபார்சு செய்கிறேன்.

சு :—தயவு செய்யுங்கள். புண்யமுண்டு நான்சேர்ந்த பிறகு விளம்பரம் செய்து மனைவிக்கு என் தகவலை அறிவிக்கிறேன்.

டா :—அப்படியே செய்! இப்போது மூளைக்கு அதிக வேலை கொடுக்காமல் படுத்துக்கொண்டிரு. (போகிறார் சுந்தரம் படுத்துக் கொள்கிறான்.)

---

## காட்சி 14

இடம் :—சென்ட்ரல் ஷ்டேஷன்.

[பம்பாய் மெயிலுக்கு பிரயாணிகள் செல்லுகிறார்கள். அனேகர் பிளாட்பாரம் டிக்கட்டு பெற்றுச் செல்லுவதை, ஒருபுறமாக உட்கார்ந்து கவனித்த மீனாக்ஷி தன் சேலை தலைப்பில் ஒரு அணாயிருப்பது நினைவு வர]

மீனாக்ஷி : ஆம், சத்திரத்தில் அப் புண்ணியவதி உதவி செய்த அணா யிருக்கிறது.

[உடனே பிளாட்பாரம் டிக்கட்டை அடைந்து உள்ளே சென்று, ஸ்திரீகள் வண்டியில் உட்கார்ந்துகொள்ள, உடனே வண்டியும் புறப்படுகிறது. அந்த வண்டி

யிலிருக்கும் சிலர், மீனாக்ஷி துக்க முகத்துடனிருப் பதை கவனித்து].

1 மாது :—என்னம்மா அழுதுக்கொண்டிருக்கிறாய் பாவம்.

2 மாது :—மனுஷாள் யாருக்காவது ஆபத்தா?

3 மாது :—எந்த ஊருக்கு போகணும்?

மீனாக்ஷி :—அம்மா ஆபத்து ஒருவருக்குமில்லை. திக்கற்றவள் பொம்பாய்க்குப் போகிறேன்.

1 மாது :—உன் புருஷன் எங்கே?

மீ :—அவர் சென்றவிடம் தெரியவில்லை.

2 மாது :—பம்பாயில் தாய் வீடா?

மீ :—தாய் வீடில்லை, தாயுடன் பிறந்தவரிருக்கிறார்.

3 மாது : சரிதான், விஷயம் வேறே, வம்பு பேச்சி என் னத்திற்கு.

மீ :—தவருதலாக நினைத்தால் என்ன சொல்லக்கூடும்.

1 மாது :—உலைவாயை மூடலாம், ஊரார் வாயை மூடமுடியு மோ? உலகம் பலவிதம் அதற்காக வருத்தப்படாதே.

2 மாது :—தண்ணி ஆழத்தை காணலாம், நெஞ்சாழத்தை எவரால் காணமுடியும். (அரக்கோணம் ஜங்ஷன் வந்து சேர வண்டியில் டிக்கட் பரிசோதகர் பெண்கள் வண்டி யில் ஏற, வண்டியும் புறப்படுகிறது. அந்த வண்டியி லுள்ளவர்கள் டிக்கட்டை சோதித்துக்கொண்டு மீனாக்ஷி யிடம் வந்து).

டி-பரிசோதகர் :—அம்மா! டிக்கட்டை தயவு செய்யுங்கள்.

மீ :—ஐயா! நான் டிக்கட் வாங்கவில்லை.

டி-பரி :—கையிலிருப்ப தென்னம்மா டிக்கட்தானே.

மீ :—அது......பிளாட்......பாரம்...டிக் (கொடுக்கிறாள்).

டி-பரி :—(வாங்கிபார்த்து) பேஷ்! கெட்டிக்காரி, நல்லசூக்ஷி தான் செய்தாய்.

மீ :—ஐயா! மோசக்கருத்துடன் செய்யவில்லை, கையில் பணமில்லாததால்......

டி-பரி :—உங்கள் தாதா ஆட்டு வண்டியா F. S.ல் போக.

மீ :—ஐயா! கோபித்துக் கொள்ளாதீர்கள் திக்கற்றவள்.

டி-பரி :—திக்கற்றவர்கள் பிரயாணஞ் செய்யத்தான் ரயில் ஏற்படுத்தி யிருக்கிறதோ?

மீ :—பரதேசிகள் செல்ல அதிகாரிகள் தயவு புரிவார்களென்ற நம்பிக்கையுடன் வந்து விட்டேன் மன்னிக்கவும்.

டி-பரி : பழைய பேர்வழிதான். நீ பைராகிச்சா என்ன!

மீ.—இல்லை, உங்கள் தங்கைபோல் பாவித்து காப்பாற்றுங்கள்.

டி-பரி :—கம்பனி உப்பை தின்று சகோதரிபோல் நினைத்து விட்டுக்கொண்டே யிருந்தால், நான் வீட்டிற்குப் போக வேண்டியதுதான், எந்த ஊருக்குப் போக வேணும்.

மீ :—பொம்பாயிக்கு.

டி-பரி :—சரிதான், அவ்வளவு தூரம் செல்ல முடியாது. பெண் பிள்ளையாயிருப்பதால் உன்னிடம் இதுவரையில் வந்ததற்கு பணம் வாங்காது விடுகிறேன். அடுத்த ஸ்டேஷனில் இறங்கிவிடு தெரியுமா, (மௌனமாயிருக்கிறாள் பரிசோதகர் மற்றவர்களை பரிசோதித்து வண்டியில்வர அடுத்த ரேணுகுண்டா ஜங்கஷனில் வண்டி நிற்கிறது. மீனாக்ஷியுடனிறங்கி) ஸ்டேஷன் மாஸ்டர் சார்! இந்த பெண்பிள்ளை டிக்கட்டில்லாமல் வந்துவிட்

டாள் கையில் காசு யில்லையாம் விட்டுவிடுங்கள் பாவம். (இதை கவனித்துக் கூட்டம் சேறுகிறது).

ஸ்டேஷன்மாஸ்டர் :—அப்படியே! என்ன கூட்டம் அங்கே போங்கோ, போலீஸ்! கூட்டத்தைப் போகச்செய். (வேலையை கவனிக்கச் செல்லுகிறார், சேவகன் வந்து)

சேவகன் :—போங்கையா! போங்கோ, என்ன கூட்டம் போங்கோ. (விலக்குகிறான் எல்லோரும் செல்ல பம்பாயிக்கு வியாபார விஷயமாய் செல்லும் வயதான வங்கப்பா என்பவர் அருகில் சென்று)

வங்கப்பா :—அம்மா! நீ எந்த ஊருக்குப் போகவேணும்?

மீனாக்ஷி :—(துக்கத்துடன்) பொம்பாயிக்கு ஐயா, நான் திக்கற்றவள் கையில் காசு கிடையாது.

வ :—ஐயோ பாவம், வருத்தப்படாதேம்மா. டிக்கட்டு வாங்கி தருகிறேன். ஐயா ஜவான் (பணத்தை கொடுத்து) பாம்பேயிக்கு ஒரு டிக்கட்டு வாங்கி வாரும். (பெற்றுச் செல்லுகிறான்).

மீ :—தங்களுக்கு மெத்த கஷ்டம் மன்னிக்கவேண்டும்.

வ :—கஷ்டமென்ன! மனுஷாளுக்கு அதிலும் பெண்பாலருக்கு நேரும் கஷ்டத்தை தீர்க்காவிட்டால் ஜன்மம் எதற்கு? நானும் பொம்பாயிக்குத்தான் போகிறேன் பயப்படாதே.

மீ :—அந்தகனுக்கு ஊன்றுகோல்போல் தங்கள் துணை கிடைத்தது. பெரியோர் செய்த புண்ணியம்.

ஸ் :—சார் வண்டி ஸ்டார்ட்டாகிர சமயம் ஏறுங்கள் இந்த பெண் என்ன சொல்லுகிறாள்?

வ :—பம்பாயிக்குப் போகணுமாம் பாவம், டிக்கட்டு வாங்கி வர ஜவானை அனுப்பியிருக்கிறேன்.

ஸ் :—புண்ணியந்தான் போங்கோ. [சேவகன் டிக்கட்டும் பாக்கி பணத்தையும் கொடுக்கிறான். வங்கப்பா அவனுக்கு ஒரு அணா கொடுத்துச் செல்லுகிறார் பின்னேறி மீனாக்ஷியும் செல்லுகிறாள். ஏறிய உடன் வண்டி புறப்படுகிறது]

வ :—பம்பாயில் உன் புருஷனிருக்கிறாரா ?

மீ :—இல்லை.

வ :—சென்னையிலிருக்கிறாரா ?

மீ :—அங்குதான், அவர் சென்றவிடம் தெரியாது வருந்துகிறேன்.

வ :—பம்பாயில் யாரிருக்கிறது ?

மீ :—தாயுடன் பிறந்த அம்மான் யிருப்பதாக கேள்வி.

வ :—வியாபாரமா ? வேலையிலிருக்கிறாரா ?

மீ :—டாக்டராக யிருக்கிறாராம்.

வ :—உன் புருஷன் தனியாக விட்டு எங்கு சென்றிருப்பார்? யார் வீடு !

மீ :—என்னுடைய மாமனார் பிரபல வியாபாரி. அதில் பெரும் நஷ்டம் ஏற்பட்டதுடன் பாங்கியிலுள்ள பொருளையும் இழந்த ஏக்கத்தால் மறித்தார்.

வ :—பெயரென்ன ?

மீ :—பிரம்மானந்தர்.

வ :—என்ன ! பிரம்மானந்தரா ! அடடா ! நல்ல மனுஷன். பாவம் இறந்தாவிட்டார். வேறு சொத்துகளில்லையோ உங்களுக்கு.

மீ :—இருந்ததை துஷ்ட நேயர்களுடன் சேர்ந்து இழக்க நேர்ந்தது. தங்கயிடமில்லாமல் சத்திரத்தில் என்னை

விட்டு சினேகிதர்கள் உதவி பெற்றுவருவதாய் சென்றவர் திரும்பவில்லை. (விசனிக்கிறாள்)

வ :—அடடா! பெரிய குடும்பத்திற்கு என்ன கஷ்டம் நேர்ந்துவிட்டது. எப்படியும் வந்து சேருவார் வருத்தப்படாதே. அம்மா! பம்பாய் ஸ்டேஷன் நெருங்கிவிட்டது. டாக்டரிருக்குமிடம் தெரியுமா?

மீ :—விசாரித்துதான் செல்லவேண்டும்.

வ :—(10 ரூபாய் நோட்டை எடுத்து) இதை கை செலவுக்கு வைத்துக்கோ, நான் நேராக வர்த்தகசாலைக்குப் போகவேணும்.

மீ :—அண்ணா! வேண்டாம். என்னை இங்கு சேர்த்ததே பெரும் உதவி.

வ :—பெண் பிள்ளை. இந்த பெரி நகரில் அவரை தேடி கண்டுபிடிக்கும் வரையில் செலவுக்கு கஷ்டப்படவேண்டாம். உன் தகப்பனார்போல் பாவி.

மீ :—(பெற்றுக் கொள்ளுகிறாள் வண்டியும் ஸ்டேஷனில் நிற்க இருவரும் இறங்குகிறார்கள்.) அண்ணா! நமஸ்காரம் போய் வருகிறேன்.

வ :—ஜாக்கிரதையாக போய்வாம்மா. (போகிறார்கள்).

---

## காட்சி 15.

இடம் :—பம்பாயில் டாக்டர் மேத்தா யிருக்கும் மாளி.

[மீனாக்ஷி பம்பாய் வீதிகளில் நடந்துச் செல்ல, டாக்டர் மேத்தா என்று எழுதிய பலகையை பார்த்து அந்த வீட்டுக்குள் சென்று]

மீ :—சார்! டாக்டர் சார்.

வே-ஆ:—(வெளியே வந்து பார்த்து) கியா! டாக்டர் ஹோனு ஹிதர் பைட்டோ பஹுலாத்தா (உள்ளேசெல்லுகிறான்.)

மீ:—(அங்குள்ள பெஞ்சில் உட்கார்ந்து) ஹிந்தி பாஷை தெரியாது அவரிடம் எப்படி விசாரிப்பது என்ன சங்கடம். அதனால் தான் ஹிந்தி பாஷையை கட்டாயப் படிப்பாய் ஏற்படுத்தியுள்ளார் போலும். (டாக்டர் மேத்தா வருகிறார் எழுந்து) நமஸ்காரம்.

டா:—நமஸ்கார். ஹிந்தி மாலும்?

மீ:—தெரியாது சார் (தலையை ஆட்டுகிறாள்.)

டா:—மத்ராஸ் வாலா அச்சா. இங்கிலிஷ் மாலும்?

மீ:—உம்—உம்—பேசத் தெரியாது. என்ன கஷ்டகாலம்.

டா:—கஷ்டமில்லே. நான் தமிழ் பேசுறோம். வயித்தியத்துக்கு அம்மா வந்தது.

மீ:—இல்லே, ஒரு டாக்டர் இருப்பிடத்தை விசாரிக்க வந்தேன்.

டா:—எந்த டாக்டர்? பேரு.

மீ:—டாக்டர் கோதண்டபாணி.

டா:—கியா! கோடண்டபாணி (யோசித்து) டாக்டர் பாணி?

மீ:—ஆம்.

டா:—ஐ-ஸீ-டாக்டர் பாணி பிரண்டுக்கு (Front) பூட்டார்.

மீ:—தெரிய வில்லேயே சொல்லுகிறது.

டா:—சண்டைக்கு மில்ட்ரி டாக்டராய் பூட்டார். ரொம்ப பணம் கொண்டு வருவார்.

மீ:—இதுவும் என் கால வித்தியாசமா?

டா:—உன் மனுஷா அவர்?

மீ:—ஆம் சார்.

டா :—பிட்டி.

மீ :—இங்கு ஹோட்டல் கிட்டயிருக்கிறதா சார்?

டா :—ஹோட்டல் நஹு தருமசால கடசியிருக்குது (உள்ளே போகிறார்).

மீ :—சத்திரத்தில் தங்கி அனுபவிச்சது போதும் அதற்கோர் நமஸ்காரம் (போகிறாள்.)

---

## காட்சி 16

இடம் :—பெங்களூர் கன்டோன்மென்ட் ஸ்டேஷன்.

[சென்னையிலிருந்து ஸ்பெஷல் வண்டியில் ரெஜிமெண்டில் சிப்பாய் வேலைக்குச் சேர்ந்தவர்கள் இறங்குகிறார்கள் அதில் சுந்தரமும் வருகிறான்].

சுபேதார் :—பை-ரோ (4 வரிசையாக நிற்கிறார்கள்) ஸ்டெடி...ரைட்-லெப்ட்...மார்ச் (எல்லோரும் செல்லுகிறார்கள்.)

---

## காட்சி 17

இடம் :—பாம்பே கதர் மில் ஆபீஸ்.

[ஏழை ஜனங்கள் தாங்கள் நூற்ற நூல்களைக் கொண்டு வந்து கொடுத்து அதன் கிரயத்தைப்பெற்று செல்லுகிறார்கள். அந்தக் கூட்டத்தில் மீனாட்சியும் தான் நூற்ற நூலைகொடுத்து பணம் பெற்றுச் செல்லுகிறாள்.]

---

## காட்சி 18

இடம் :—கண்டோன்மென்டில் சிப்பாய்கள் கபாத் செய்யும் மைதானம்.

[சிப்பாய்கள் டப்பாய்க்குடன் வந்து நிற்கிறார்கள்].

சுபேதார்:—(ரோல்கால்) (ஒவ்வொருவர் பெயரிட்டு அழைக்கிறான்) ராம்.

ராம் :—எஸ் சார்.

சுபே :—லோகன்.

லோகன் :—எஸ் சார்.

சுபே :—கோபால்.

கோபால் :—எஸ் எஸ் ச்சார்.

சுபே :—(நகைத்து) கணேஷ்.

கணேஷ் :—எஸ்.

சுபே :—சுந்டர், சுந்டர்;

ராம் :—ஆஜர்யில்லே சார். (அது சமயம் சுந்தரம் ஓடி வருகிறான்).

சுபே :—எங்கு போனே ?

சுந்தரம் :—ஸ்டூல் சைடுக்கு சார்.

சுபே :—யார்கிட்ட சொல்லிப்போனே ?

சு :—சொல்லாதெ போனேன் தப்பு சார்.

சுபே :—இங்கி கிட்டவா (அருகில் எதிரே நிற்கிறான்) இது மில்ட்ரி வேலே, இப்படி போக்கூடாது மாலும், தெரியும்.

சு :—இனிமேல் போகலேசார் மன்னியுங்கள்.

சுபே :—(சுந்தரம் பேச விக்கர் வாசனைவா கவனித்து) விக்கர் சாப்படபோனே ?

க: (விழித்தவனாய்) இல்லே சார்........

சுபே:—பட்மாஷ் பொய் பேசரான் நம்பகிட்டே, ஹேய் கோபால் ஹிதர் ஹாவ், (கோபால்வந்து நிற்கிறான்) இவன் வாய் பாரு விக்கர் வரான்?

கோபால்:—(சுந்தரத்தின் அருகில்சென்று) ஹா-ஹா மூச்சி விடு. (அவ்விதம் செய்ய விக்கர் வாசனை வருகிறது) மாஸ்டர் சாராயம் வாசனை வருகிறது.

சுபே:—பான்சோத்! சர்கார்கிட்ட பொய் சொல்ரான் ஒரு தப்பு, விக்கர் குடிச்சான் தோ தப்பு, தெரிறான். (மௌனமாயிருக்கிறான்) இந்த வேலைக்கி சரி பண்ணலில்லே, நம்பள் டிஸ்மிஸ் பண்றங்கோ. ஹேய் ராம், இவன் உடுப்க்கி வாங்கிகினு வெளியே தெத்திரான்.

க:—இந்த தடவை மன்னிக்க வேண்டும்.

சுபே:—தப்பு பண்றான் நம்போ மன்னிக்கிறன், சர்க்கார் ஆர்டர்செய்றான் ஜாவ். [சுந்தரம் உடுப்பை கொடுத்து விட்டு அரை நெஜார், அரை சட்டையுடன் வெளியே செல்லுகிறான்] நீங்கள்க்கி தப்புசெய்தா இப்படிபண்ற மாலும். ரைட்-மார்ச் (எல்லோரும் வலப்பக்கம் திரும்பிச் செல்லுகிறார்கள்).

---

## காட்சி 19

இடம்:—மைசூருக்குச் செல்லும் சாலை.

[சாலையில் நடந்துவர களைப்புற்று ஒரு மரத்தடியில் அமர்ந்து.]

க:—ஹா! சர்வேஸ்வர! என் வாழ்நாட்கள் இவ்வித கேவலமான நிலமைக்கு வருமென்று நினைத்தவனல்ல, செல்

வத்தை இழந்ததுமன்றி அன்புள்ள மனைவியையும் பிரிய நேர்ந்ததே, என்னைக் காணாது எவ்விதம் கஷ்டப்படு கின்றனளோ, எங்குற்றனளோ, என்னவாயினளோ, எப்போது சாண்பேன். ஈசா! தாம் ஜீவகாருண்ய முடையவரென்று போற்றுகிறார்களே, இதுதானா உமது கருணை......தெய்வத்தை நோவது தவறு, புத்தி ஹீனத்தால் துற்பழக்கத்தைக் கைப்பற்றியதால் இக் கதி நேர்ந்தது. சூதால் விளையும் துன்பத்தையும், குடி யால் நேருங் கஷ்டங்களையும் சிறிதும் சிந்தித்தேனில்லை, அக்கொடிய பழக்கத்தை இனி கனவிலும் நாடேன், இது சத்தியம், மும்மூர்த்திகளறிய முக்காலும் சத் தியம், சத்தியம், சத்தியம். ஹே! பரமாத்மா நீயே கதி, நீயேகதி, (களைப்பால் படுத்து நித்திரைபுரிகிறான் அதுசமயம் அருகிலுள்ள புற்றிலிருந்து ஒரு நாகம் வந்து அவனது சிரசுக்குபின் படமெடுத்து ஆடுகிறது. அவ்வழியாகச் செல்லும் குமரப்பா என்னும் ஒரு கூலியாள் கண்டு பயந்து.)

குமரப்பா :—ஹ! ஹா. பாம்பு! பாம்பு!! அம்மா தாயே, மாரி தாயே, மாரிதாயே, (கையை தட்டுகிறான் உடனே அந் நாகம் புற்றுக்குள் சென்றுவிடுகிறது பிறகு அருகில் சென்று) ஐயா! ஐயா!! (தட்டி எழுப்புகிறான்.)

ச :—(திடுக்கிட்டு விழித்து) யாரைய்யா! ஏன் எழுப்புகிறீர் கள்?

கு :—எழுந்து உட்காரு செத்தநேரத்துக்குமுன் உன்னே பாம்பு கடிக்கப் போச்சே.

ச :—(மெதுவாய் உட்கார்ந்து) என்ன பாம்பா! கடிக்காமலா போச்சி.

கு :—ஆம், கெட்டி உயிரு உனக்கு.

சு :—இறந்திருந்தால் சுகப்பட்டிருப்பேனே, கடவுள் ஏன் என்னை காப்பாற்றினார் ?

கு :—இப்படி வெறுத்து சொல்ல என்ன கஷ்டமோ பாவம்.

சு :—வேலையில்லாது பல நாட்கள் பட்டினியுடன் பரதவிக்கும் பாவி நான், திக்கற்றவன்.

கு :—ஐயோ பாவம் பட்டினியாவா யிருக்கே, நான் சாதம் கொண்டு வந்திருக்கிறேன் கொஞ்சம் போரேன் சாப்பிடுவா பாவம்.

சு :—எனக்கிட்டால் உமது குக்ஷிக்கு குறைந்திடும் வேண்டாம்.

கு :—பிறர் பசித்திருக்கப் பார்த்து சாப்பிடுவது பாவம். இருவரும் சாப்பிட வேண்டியதிருக்கிறது (தன்னிடமுள்ள சாதமூட்டையை அவிழ்த்து சுந்தரத்திற்கும் போட்டு தானும் புசித்துக்கொண்டு) எந்த ஊர் எங்கே போறாய் ?

சு :—நான் சென்னை, வேலையில்லாது கஷ்டப்பட்டுக்கொண்டு எங்கு செல்வதென்று தோன்றாது இவ்வழியாகச் செல்ல, களைப்பால் படுத்தேன்.

கு :—பட்டணத்திலா வேலை அகப்படலே! உம், நாடெங்கும் கூலிவேலைக்கூட கிடைக்காதே கஷ்டப்படுறாங்கோ.

சு :—உமக்கும் வேலையில்லையா ?

கு :—சாமி புண்யத்திலே மைசூர் பொன் சுரங்கத்திலே கூலி வேலை செய்றேன். ஐயா உன்னெ பாத்தா பரிதாபமாயிருக்குது, என்னோடேவா, மேஸ்திரிக்கிட்ட இதமாச்சொல்லி வேலைக்கு வைக்கிறேன்.

சு :—அவ்விதம் செய்தால் மெத்த புண்ணியம்.

கு :—உலகத்திலே மனுஷாளுக்கு மனுஷாள் உதவி செய்

யாப்போனு, புரந்து என்ன பலன், மெதுவா நடந்து வா போலாம். [அவன் கையைப்பற்றி அழைத்துச் செல்லுகிருன்.]

---

## காட்சி 20

இடம்:—மீனுக்ஷி வசிக்கும் சிறிய அறை.

[மீனுட்சி 10 மாதம் கர்பணியாய் அமர்ந்து நூல் நூற்றுக் கொண்டு.]

மீ:—திக்கற்றவர்களுக்கும், நாதநற்ற சிறுவர்களுக்கும், ஏழைகளுக்கும், பிழைக்க வழியற்றவர்களுக்கும், ஓடி வேலைசெய்ய யியலாத காலற்றவர்களுக்கும், பிறர் ஏவலைக்கேட்டு செய்ய யியலாத செவிடர்களுக்கும், ஆதாவற்ற விதந்துகளுக்கும், அருந்துணைபுரிந்து காத்திடும் இந்த நாட்டினத்தின் பெருமையே! பெருமை. (நூல் நூற்கிருள் பிறகு நிறுத்தி) உடம்பு சொல்ல முடியாத ஓர்வித கஷ்டமாயிருக்கிறது, நூற்கவும் சாத்தியப்படவில்லை, காரணம் தெரியவில்லை, என்ன செய்வது (அது சமயம் சினேகிதி வருகிருள்) வாம்மா - சாந்தாபாய் - உட்காரு.

சாந்தாபாய்:—(உட்கார்ந்து) மீனுக்ஷி எவ்வளவு நூற்ருய் விற்பனைக்குபோகலாம் வருகிருயா?

மீ:—சாந்தா - அதிகம் நூற்கமுடியவில்லை. சிறிது நேரமாக - உடம்பு - இன்னவித பாதை - படுகிறதென்று - சொல்ல முடியாது - தவிக்கிறேன்.

சா:—இது 10வது மாதம் பிரசவ குறியாயிருக்கும்.

மீ:—அப்படிக்கு - ஒன்றும் - தோன்றவில்லையே - .

சா :—முதல் பிரசவம், அனுபோகமில்லை, உடனே பிரசவ ஆஸ்பத்திரிக்குச் செல்லம்மா.

மீ :—ஊர் - அனுபவமில்லை - எவ்விதம் - செல்லுவேன்.

சா :—சரி! டெலிபோன்செய்து ஆம்புலன்ஸ் காரைக் கொண்டுவரச் சொல்லுகிறேன் (போகிருள்).

மீ :—பெண்களுக்கு பிரசவகாலம் புனர்ஜன்மமென கேள்வி, மீனாக்ஷிதேவி! பிறக்கும் குழந்தையை பார்த்து சந்தோஷமடைந்த பிறகு என்னை உம்மிடம் அழைத்துக் கொள்வாய். திக்கற்றவர்களை காத்திடும் உலக மாதா, என் குழந்தையை காத்திட பிரார்த்திக்கிறேன் (கண் கலங்கியவாறிருக்கிருள்.)

சா :—மீனாக்ஷி, கார்வந்துவிட்டது வா (முகத்தைபார்த்து) ஏன் வருத்தப் படுகிருய் சுகப் பிரசவமாகும் பயப் படாதே.

மீ :—இல்லை! இந்நூலை என்ன செய்வது?

சா :—நான் விற்றுக்கொண்டு வருகிறேன். சீக்கிரம் புறப்படு (நூலை எடுத்துக்கொள்ளுகிருள்.)

மீ :—என்னை - தனிமையாகவா - போகச்சொல்லுகிருய்?

சா :—நானும் வருகிறேன்.

மீ :—(எழுந்து) நீயே என் சகோதரி! உன் விசுவாசத்தை - என்றும் - மறவேன் (கைபற்றி சென்று காரில் ஏறிக் கொண்டு போகிருர்கள்.)

---

## காட்சி 21

இடம் :—பிரசவ ஆஸ்பத்திரி.

[மீனாட்சி பிரசவித்து படுக்கையில் படுத்திருக்கிறாள். பிறந்த பெண் குழந்தையை தாழ்வாரத்திலுள்ள தொட்டிலில் படுக்கவைத்திருக்கிறது. நரஸு அருகில்வந்து தேகத்தைப் பரிசோதித்து குறிப்பு சீட்டில் எழுதி முடிந்தவுடன் ]

மீனாக்ஷி :—ஸிஸ்டர் ! குழந்தைக்கு இரண்டு நாளாய் - நான் பால் கொடுக்கவில்லையே -

நரஸு :—உனக்கு பலஹீனம் பால் கொடுக்கக்கூடாது. பேபிக்கி நாங்கோ கௌ-மில்க் கொடுத்து வருகிறோம் பயப்படாதே !

மீ :—பேபியைப்பார்க்க - பிரியமாயிருக்கிறது.

நர :—கொண்டாறேன் பாரு (குழந்தையை கொண்டுவந்து கையில் கொடுக்கிறாள் எழுந்து உட்கார முயலுகிறாள்) நோ ! நோ !! எழுந்திருக்காதே அப்படியே வாங்கிப் பார்.

மீ :—(வாங்கி முத்தமிட்டு) என் கண்ணு (நரஸுயிடம் கொடுத்து) ஸிஸ்டர் ! நான் - எப்போது வீட்டிற்குப் போகலாம்?

ந :—பலம் கொஞ்சம் வந்த பிறகு, டிஸ்ஜார்ஜ் செய்யும்படி பெரிய டாக்டர் துரைசாணிம்மா உத்தரவு.

மீ :—அவ்வளவு தயவு காட்டியது ஏதோ !

ந :—டாக்டர் பாணி சொந்தக்காரிண்ணு ரொம்ப கவனிக்கிறாங்கோ.

மீ :—எப்படி தெரியும்?

ந :—நான் சொன்னே.

மீ:—சந்தோஷம். இவ்வளவு தயவு காட்டியதற்கு நான் என்ன உதவி செய்யப் போகிறேன்.

ந:—எங்கள் டேட்டி. (குழந்தையை தொட்டிலில் போட்டு வேறுயிடம் செல்லுகிறாள்.)

மீ:—திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணைபுரியுமென்பதை அறிவிக்க தேவி மீனாக்ஷியின் கிருபையே. அன்னையே உனது கருணையை எவ்வாறு போற்றுவேன். (மனதுள் ஸ்மரிக்கிறாள் அப்போது பெரிய டாக்டர் துரைசாணியும் நரஸும் வருகிறார்கள் உடனே கண் விழித்து) நமஸ்காரம் டாக்டரம்மா.

டா-துரைசாணி:—நமஸ்கார். (அருகில் மாட்டியுள்ள பலகையை எடுத்து குறிப்பைப் பார்த்து) வெறி - வீக் - கிவ் - ஹர் - ஹிமோ - குளோபின்.

ந:—எஸ் - மேடம்.

டா-து:—உன் மனுசன் டாக்டர் பேர் என்ன ?

மீ:—டாக்டர் பாணி.

டா-து:—எஸ் - எஸ் - ஐ - ரிமெம்பர். பூர் - சாப் (முகம் மாருதலுடன் செல்லுகிறாள்)

மீ:—(நரஸை பார்த்து) ஸிஸ்டர்! பெயரை மறுபடியும் கேட்டு உடனே முகம் மாரியதே? காரணம்.

ந:—எனக்கு கூட தெரிலே.

மீ:—சண்டையில் அவருக்கு கெடுதி நேர்ந்திருக்குமா ?

ந:—டாக்டருக்கு பயமில்லெ.

மீ:—ஸிஸ்டர்! பேப்பரை பார்த்தால் விபரம் தெரியலாம் தயவு செய்து பார்த்துச் சொல்லுங்கள். (பேப்பர் எடுத்துவர நரஸ் போகிறாள்) தேவி, என் உறவினர்களில் அவரொருவரேயிருப்பது காத்தருளவேண்டும்.

(பேப்பரை பார்த்தபடியே நாஸ் வருகிருள்) என்ன ஸிஸ்டர் விசேஷம்.

ந :—எதிரி போட்ட பாம்பிஞல் 11-வது காவல்ரியில் அனேகர் சேதம் அடைந்தார்கள். அதில் டாக்டர் பாணியும் இறந்துவிட்டார் விசனிக்கத் தக்கது.

மீ :—ஹா ! தெய்வமே, அவரையும் இழக்க நேர்ந்ததா ! உலகில் உற்ருெருவருமில்லையே. (அப்படியே மூர்ச்சை யடைகிருள். உடனே நாஸ் பலவிதம் உபசரித்தும் பயன்படாததைக் கண்டு, உடனே பெரிய டாக்டரை அழைத்துவந்து காட்ட, அவரும் கவனித்து)

டா-து :—ஷீ - ஓண்ட் - சர்வே...பூர் - பேபி (சிறிது நேரம் நிற்கிருள். உடனே மீஞக்ஷி இறந்துவிடுகிருள் பார்த்து) சாரி - எக்ஸ்பையர் - ரிமூவ் - ஹர்.

ந :—மேடம் - ஒன் - ரிக்கொஸ்ட்.

டா-து :—வாட் ?

ந : இவளுடைய போட்டோ எடுத்து லாக்கட்டில் போட்டு பேபி கழுத்தில் அணிந்தால், பூர் பேபி பெரியவளாஞல் மதர் என்று பார்த்துக்கொள்வாள்.

டா-து :—ஹால் - ரைட், டூ - அட் - மை - காஸ்ட். (போகிருள்).

---

## காட்சி 22

இடம் :—மைசூர் போன் சுரங்கம் வேலைசெய்யுமிடம்.

[சுரங்கத்தில் ஒருபுரம் கூலியாட்களோடு சுந்தரமும் வேலை செய்து, சிறிது இளப்பார நிற்க பாறை ஒன்று அசைவதுபோல் தென்பட]

சுந்தரம் :—சொக்கப்பா ! இங்குவா. (வருகிருன்) இந்த பாறை இடிந்துவிடும்போல் தோன்றுது பார்.

சொக்கப்பா :—(பார்க்கிருன் மற்ற கூலியாட்கள் சிலர் அங்கு வருகிருர்கள்) போடா போ! ஒன்றுமில்லெ, பாட்டன் நாளா, நா வேலெ செய்யிரேன் எனக்குத் தெரியாதா.

நாகப்பா :—என்ற சொல்ருண்டா சுந்தரம்.

சொ :—இந்த பாறே இடிஞ்சி உழுந்துடுமா.

நா :—அடடே, இவென் பெரிய இஞ்சினீருடா.

மங்கப்பா :—இஞ்சினீருக்கு மேலே கழினீருடா இவன். போடா பயித்தியக்காரா, காத்தாலெதான் இஞ்சினீர் பாத்துட்டு வேலெ செய்ய சொன்ருரே. (மேஸ்திரி மாரியப்பா வருகிருன்).

மாரியப்பா :—என்ருங்கடா வேலெ செய்யாமே பேச்சி.

சொ :—இதோ இந்த பாறே இடிஞ்சி உழப்போவுதுண்ணு சொல்ரானுங்கோ.

மா :—யாருடா அவன் ஜோஸியக்காரன்.

நா :—சுந்தரங்கோ.

மா :—ஹோ - ஹோ - இவனு! டே! நீ வேலைக்கு வந்து இன்னும் சரியா வருஷமாகலே இதுக்குள்ள ரொம்ப அனுபோக பட்டுட்டியோ.

சு :—ஐயா! கோபிக்கவேண்டாம். ஏதோ என் புத்தியிற் பட்டது, என் போன்ற ஏழை சகோதரர்கள் சாகாம லிருக்கவேண்டி சொன்னேன்.

மா :—சரி. இவன் பேச்சே பாக்கலாம். வேரேயிடத்துக்குப்போய் வேலே செய்புங்கோ. போங்கோ. (எல்லோரும் செல்லுகிருர்கள் மேஸ்திரியும் செல்லுகிருன். சிறிது நேரத்திற்கெல்லாம் அப்பாறை இடிந்து விழுகிறது. சப்தத்தை கேட்ட சூபிரண்டெண்டும், இன்ஜினீரும் ஓடி வந்து கவனித்து)

சூபிரண்டென்ட் சொரணப்பா : மாரியப்பா ! மாரியப்பா! (ஓடி வருகிருன்) எதிர்பாராது இடிந்ததால் எத்தனை கூலிகள் இறந்தார்கள் ?

மா :—ஒருவரும் சாகலே சார்.

சூ-சொ :—என்ன! சாகவில்லை. உண்மையா? எப்படி தப்பிஞர்கள்.

மா :—சுந்தரம் என்ற கூலி ஏதோ குறிப்பால் முன்ஞடி சொன்ஞன் அதன்மேல் தப்பிஞர்கள்.

சொ :—கூலி சுந்தரமா யார் அவன் !

இன் :—அவனை கூப்பிடுங்கள்.

சொ :—கூப்பிடுவதாக அழைத்துவா சீக்கரம் (போகிருன்) புத்தி கூர்மையுள்ளவஞயிருக்கவேண்டும்.

இன் :—அதோடு வாசித்தவஞயிருக்கவேண்டும், (மாரியப்பா சுந்தரத்தை அழைத்து வருகிருன் சுந்தரம் இருவருக்கும் நமஸ்காரம் செய்து நிற்கிருன்) இவன் தாஞ சுந்தரம் !

மா :—ஆமாம் சார்.

சொ :—சுந்தரம் அந்த பாறை இடியுமென்று எப்படி தெரிந்துக்கொண்டாய் ?

சு :—சார் மன்னிக்கவேண்டும். சிறிது இளப்பார நின்றேன் அப்பாறை ஏதோ அசைவதுபோல் தென்பட்டது, அதஞல் சொன்னேன்.

சொ :—இதற்குமுன் நீ என்ன வேலையிலிருந்தாய் ?

சு :—எங்குமில்லை, இதுதான் முதல் செய்யும் கூலிவேலை.

இன் :—ஏவ்வளவு தூரம் வாசித்திருக்கிருய் ?

சு :—இன் [illegible]டியட் வரையில்.

இன் :—அப்படியா! அவ்வளவு வாசித்த நீ இந்த கூலி வேலைக்கு வருவானேன்?

சு :—என்னைவிட அதிகமாய் வாசித்தவர்களுக்கே தக்க வேலைகிடைக்காது கஷ்டப்பட, இது எனக்கு கிடைத்ததே விசேஷமென்று சேர்ந்தேன்.

இன் :—மிஸ்டர் சொர்ணப்பா, படித்தவன் இவனைப்பற்றி பிறகு யோசிக்கலாம், சரிபோ. (சுந்தரம் நமஸ்கரித்துச் செல்லுகிறான் இன்ஜினியரும், சொரணப்பாவும் செல்லுகிறார்கள் இதை கவனித்துநின்ற சில கூலிகள் சேர்ந்து.)

சொக் :—அடே! நாகப்பா! சுந்தரத்துக்கு யோகம் பொரந்துப் போச்சிடா.

நா :—படிச்சவங்க எப்பவும் மேலுக்கு வருவாங்கோ.

சொ :—நம்ப அப்பனைபோலெ யாரிருப்பாங்கோ.

மங் :—டாணு! டேனு! தெரிஞ்சிக்காதேயே இந்த கூலிவேலைக்கு வந்துட்டோம், மேலே எங்கே போரது.

நா :—மேல் லோகத்துக்குத்தான் போகலாம்.

மங் :—வாங்கடா மேஸ்திரி பயல் வந்துட்டாணு துட்ட போருன். (போகிருர்கள்)

---

## 7 வருஷத்திற்கு பிறகு

## காட்சி 23

### இடம் :—திக்கற்ற பெண்கள் பாடசாலை.

[பாடசாலையின் வருஷாந்திர கொண்டாட்டத்திற்கு பம்பாய் கவர்னர் மனைவி லேடி மேரிங்டன் முன்னிலையில் நடைபெறுகிறது].

1. சிறுமிகளால் கடவுள் வணக்கம்.

"ஆதியந்தங் காட்டாத முதலாயெம்மை
யடிமைக்கா வளர்த்தெடுத்த வன்னைபோல
நீதிபெறுங் குருவாகி மனவாக்கெட்டா
நிச்சயமாய்ச் சொச்சமதாய் நிமலமாகி
வாதமிடுஞ் சமய நெறிக்கரியதாகி
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்காநின்ற
சோதியை யென்னுயிர்த் துணையைநாடிக் கண்ணீர்
சொரிய விருகாங்குவித்துத் தொழுதல்
செய்வாம்."

2. ஆறு பெண்கள் கோலாட்டம் போடுதல்.

3. சூரிய குமாரியும் கங்காதேவியும் சம்பாஷணை.

கங்காபாய் :—அம்மா! இந்நகரில் என்ன விசேஷம்?

சூரியகுமாரி :—வியாபாரத்தில் மேன்மையடைந்தது.

க :—சுயநன்மைக் குறியது, பொது நன்மையைப் பற்றிக் கேட்டேன்.

சூ :—பொது நன்மைக்காகப் பாடுபடும் அரசாங்கமல்லவா.

க :—என்ன செய்துவருகிறார்கள்?

சூ :—பொதுஜன நன்மையில் முக்கியமாய் திக்கற்ற பெண் பிள்ளைகளை ரக்ஷித்து வருகிறார்கள்.

க :— ரக்ஷித்தால் மட்டும் போதுமா ?

சூ :—யுக்த வயதை அடைந்து தன்னைத்தான் போஷித்துக் கொள்ள கல்வியிலும் தேர்ச்சிபெற செய்கிறார்கள்.

க :— அவ்விதம் நடத்திவர முன்னின்ற புண்யாத்மா எவரோ?

சூ :—இந்நகரத்தை பிரதிநிதியாக ஆளும் மாக்ஷிமைதங்கிய கவர்னர் துரை மனைவி லேடி மேரிங்டன் சீமாட்டியின் ஊக்கம்.

க :—அச்சீமாட்டிக்கு நம் போன்ற சிறுமிகள் எவ்விதம் நன்றியறிதலைக் காட்டுவது ?

சூ :—நமது அன்பார்ந்த வந்தனத்தால். (இருவரும் நமஸ்கரித்துச் செல்லுகிறார்கள்)

4. சூரியகுமாரியின் கதனம் (Recitation).

சூ :—உலகில் கீர்த்திப்பெற்ற அரசாக்ஷி பிரிட்டிஷ் அரசாக்ஷியே !

எப்படி ? பிரஜைகளின் நன்மையை நாடுகிறார்கள்.

எவ்விதம்? நமக்கு நேத்திரமாய் விளங்கும் கல்வியை கற்பிக்கிறார்கள்.

எதற்காக ? அவர்கள் நாட்டிலுள்ளவர்கள் போல் சமத்துவம் பாராட்ட.

அதற்குமட்டுமா ? இல்லை ! பல தொழில்களில் தேர்ச்சி பெற பண்டை காலத்தில் மறைந்துள்ள தொழில் இரகசியங்களை புத்தக ரூபமாய் பிரசுரம் செய்கிறார்கள்.

அதைப்பெற பொருள் வேண்டுமா ? வேண்டாம் ! ஏழை மக்களில் ஊக்கத்துடன் கற்றுக்கொள்ளும் பிள்ளைகளுக்கு, இனமாக அளித்து, வாசிக்க உபகார சம்பளமும் உதவிபுரிகிறார்கள்.

அவ்வித தேர்ச்சி பெருவதால் பயனென்ன ? கற்ற யாவ

ரும் ஒற்றுமையுடன் வாழும் நாள் வருங்காலத்தில் சுயராஜியம் அளிக்க முன்வருவார்கள்.

அடையும் பயனென்ன? பாரதநாடு செழிப்புற்று, வறுமையின்றி வாழலாம். இவ்வித கருணையுள்ள நமது மாக்ஷி மைதங்கிய ஆறும் ஜார்ஜி மன்னர்பிரான் ஆயுள்விருத்தியாக ஆண்டவன் அருள்புரிய நாம் பிரார்த்திப்போம். (எல்லோரும் வாழ்த்துபாடி முடிக்கிறார்கள்.)

லே-மேரிங்டன் :—(சூரியகுமாரியை அழைத்து மெடல் கொடுத்து) கடவுள் நன்மை புரிவாராக. (சூரியகுமாரி பெற்றுக்கொண்டு நமஸ்கரித்துச் செல்லுகிறாள், பாடசாலை தலைவரைப்பார்த்து) இந்த பெண் யார்?

பா-தலைவர் :—ஏழை மீனாக்ஷி என்னும் மாதின் மகள், ஒரு மாத குழந்தையில் தாயை யிழந்தவள். பிள்ளைகளில் புத்தி கூர்மையுள்ளவள்.

லே-மே :—இவள் உயர்தரப் படிப்புக்கு நான் உதவிபுரிகிறேன்.

பா-த :—மிக்க வந்தனம். (மாலை சூட்ட கரகோஷத்துடன் கலைகிறது).

---

## காட்சி 24

இடம் :—மைசூர், பொதுக்கூட்டம் கூடுமிடம்.

[சுரங்கத்தின் மேல்பார்வை தலைமை யதிகாரி வேலைப் பார்க்கும் சுந்தரம் மேடைமீது நிற்க நகரத்து ஜனக்கூட்டம் அமர்ந்திருக்கிறார்கள்].

சுந்தரம் :—சகோதரர்! சகோதரிகளே!
நான்செய்யப்போகும் உபன்னியாசம் எனது ஏழை சகோதரர்கள் முன்னேற்றமடையும் பொருட்டே!

பகுத்தறிவு பெற்ற இம்மானிட ஜன்மம் மேன்மை பெற்றதென யாவரும் அறிந்ததே, அதனை சிறப்பிக்கச் செய்வது நமது கடமை. அதை தவிர்த்து வாழ்நாட்களில் பல துற்செய்கைகளில் ஈடுபட்டு உய்வது கேவலமானது. சூதாட்டம், குடி, இதுகளை அறவே யொழிக்கவேண்டும். அதனால் சம்பவிக்கும் கெடுதிகள் யாதெனில், சூதாடுபவர்கள் தங்களுக்குற்ற பொருளையிழந்து ஜெயிப்போமென்ற முழுநம்பிக்கையுடன் மனையாள் மாங்கல்யமென்றும் சிந்திக்காது கை பற்றி இழந்து கஷ்டத்தை யடைகிறார்கள். சூதினால் பொருள் பெறுவோமென்ற நம்பிக்கைக் கொள்ளாதீர்கள். ஆண்டவன் அருளிருந்தால் நன் மார்கத்தில் பெற்று சுகஜீவியாய் வாழலாம். குடியினால் நேரும் துன்பங்கள் பல, என் அறிவுக்கெட்டியவரையில் தெரிவிக்கிறேன். தேக ஆரோக்கியத்தை இழக்கிறோம், பொருள்களை அழிக்கிறோம், குடும்பத்திலுள்ளவர்களை ஹிம்ஸிக்கிறோம், பரஸ்திரீகமனம் செய்ய முயலுகிறோம், உள்ள கௌரவத்தை போக்கிக் கொள்ளுகிறோம் கொலைப் பாதகர்களாக ஆகிறோம், அற்ப ஆயுளைப் பெற்று மடிகிறோம், இதற்கோ ஈசன் ஜன்மத்தை யளிக்கிறார், பெருமையுடன் வாழ்ந்து பிறருக்கு நம்மாலியன்ற உதவியும், நன்மையும் செய்யவேண்டியே

ஒருவன் :—(குடிவெறியுடன் எழுந்து) ஐயா ! குடிக்கவேண்டாங்கிறியா.

சு :—ஆம்.

மற்றவன் :—ஹே! மத்தியில் பேசாதே உக்காரு.

குடியன் :—நா...கேக்கிறேன், நீ என்ன?

சு :—என்ன கேட்கவேண்டுமோ கேளும்.

குடி :—கஷ்டப்படும் கூலிகாருங்கோ எப்படி குடிக்காதிருக்க முடியும்?

சு :—எதற்காக குடிக்கவேண்டும்?

குடி :—உடம்பு நோவு தெரியாதே நண்ணு தூங்க

ச :—அதற்கு வேறுவிதம் செய்யலாம்.

குடி :—மருந்திருக்குதா?

சு :—மருந்து மாயமில்லை மனதிடச்சித்தமே, தேகவலி தீர்த்துக்கொள்ள வெந்நீரில் குளியுங்கள், பிறகு இஷ்டமான ஆகாரத்தை வேண்டியமட்டில் அருந்துங்கள், ஆரோக்கியமாய் நித்திரை புரிவீர்கள்.

குடி :—புத்திமான் நீங்கோ சொல்றீங்கோ செய்துபாக்கிறேன்.

சு :—எனக்காகவல்ல உலக நன்மைக்காக குடி பழக்கத்தை விலக்குங்கள். இன்று முதல் விலக்கினோமென்று கடவுள்முன் உறுதி கூறுங்கள்.

எல்லோரும் : விட்டோம், விட்டோம், சூதையும், குடியையும் - கடவுள் சாட்சியாக.

சு :—அவ்விதம் நடக்கும் சகோதரர்களுக்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன் (போகிறார் கூட்டம் கலைகிறது).

# 15 வருஷத்திற்கு பின்

## காட்சி 25

இடம் :—வைத்திய கலாசாலை டெனிஸ் ஆடுமிடம்.

[டெனிஸ் பந்தியத்தில் பைனல் (Final) ஆட்டத்தில் ஸ்ரீமதி சூரியகுமாரியும், ஸ்ரீ சுகுமாரனும் விளையாடுவதை ஆண், பெண், மாணவர்கள் அமர்ந்து பார்க்கிறார்கள். ஜெயிப்பவருக்கு அளிக்கும் பரிசு வெள்ளி கப் ஒன்று மேஜையின்மீது வைத்துக் கொண்டு எதிரில் பிரின்ஸிபால் அமர்ந்திருக்கிறார். முடிவில்ஸ்ரீமதி சூரியகுமாரி ஜெயம்பெற யாவரும் கரகோஷம் செய்கிறார்கள்].

**பிரின்ஸிபால்** :—ஸ்ரீமதி சூரியகுமாரி, (எதிர்வந்து நமஸ்கரித்து நிற்கிறாள்) பைனல் ஆட்டத்தில் ஜெயம்பெற்ற நீ பைனல் வாசிப்பிலும் தேர்ச்சியடைந்து, உனது தொழிலிலும் கீர்த்திப்பெற்று தீர்க்க ஆயுளுடன்வாழ கடவுள் கிருபை செய்வாராக. (கப்புவை எடுத்து கொடுக்கிறார், கரகோஷம்செய்ய சூரியகுமாரி பெற்றுக் கொண்டு எல்லோருக்கும் நமஸ்கரித்து செல்லுகிறாள் சுகுமாரனும் அவள் கையை குலுக்கிச் செல்லுகிறான்.)

---

## காட்சி 26

இடம் :—இராஜா தோட்டம் மைசூர்.

[தோட்ட விருந்துக்காக பெரிய உத்தியோகஸ்தர்களும், தனவந்தர்களும் வருகிறார்கள், அங்கு டாக்டர் சூரியகுமாரியும், டாக்டர் சுகுமாரனும் சந்திக்கிறார்கள்].

**டாக்டர்-குமார்** :—(குமாரியைப்பார்த்து) ஹல்லோ டாக்டர் குமாரி, சௌக்கியந்தானே ! (இருவரும் கைகுலுக்கி.)

டாக்டர்-குமாரி :—எஸ் - தாங்கள் சௌக்கியமா?

குமார் :—எஸ்-இங்கு பிரைவேட் பிராக்டிஸ் செய்கிறாயா ?

குமாரி :—இல்லை, இராணி ஆஸ்பத்திரியில் வேலையாயிருக்கிறேன். தாங்கள் ?

குமார் :—பாலெஸ் டாக்டர்.

குமாரி :—சந்திப்புக்காக சந்தோஷம். (மேயர் பதவியிலிருக்கும் சுந்தரம் வர கரகோஷம்செய்ய நமஸ்காரம் செய்தபடி எல்லோருடனும் சேர்ந்து சிற்றுண்டி அருந்துகிறார், முடிவுபெற்றதும், திவான் தேவப்பா என்பவர் சுந்தரத்திற்கு மாலை சூட்டி மத்தியில் நின்று.)

தேவப்பா :—சீமான்களே, சீமாட்டிகளே! நமது நண்பர் மேயர் சுந்தரம் இராஜாங்க ஊழியத்தில் தன் அலுவலை கவனிப்பதுடன், பொதுஜன நன்மைக்காக உழைத்து நமது இராஜாங்கத்தில், சூது என்ற வார்த்தையையும், குடியர் என்ற பெயரையும் அகற்றி ஏழை மக்களை போஷித்தும் வருவதற்காக நமது மாக்ஷிமை தங்கிய மகாராஜா அவர்கள் தனது பிறந்த நாள் கொண்டாடிய தினத்தில் அன்புடன் அளித்த "பிரஜாப்பிரிய பூஷணம்" என்னும் பட்டத்தைப் பெற்றதற்காக நாமெல்லோரும் சந்தோஷங் கொண்டாடி "பிரஜாப்பிரியபூஷணம் மேயர் சுந்தரத்தை" பெருமைபடுத்துவதுடன், பகவானால் நீண்ட ஆயுளையும் பெற்றுவாழ பிரார்த்திக்கப்படும். (கரகோஷம்) இச்சடங்குக்கு வந்துள்ள அனைவருக்கும் வந்தனம்.

சுந்தரம் :—(எழுந்து நமஸ்கரித்து) திவான் அவர்களுக்கும், சகோதரர், சகோதரிகளுக்கும், எனது அன்பார்ந்த வந்தனத்தை அளிக்குமுன் சில வார்த்தைகள் சொல்ல வேண்டியவனாயிருக்கிறேன். பிறவியில் நம்மாலியன்ற

வரை உலக நன்மைக்காக உழைக்கக் கடமைபட்டுள்ளோம். சிறியேனால்செய்த அற்ப ஊழியத்திற்காக ஜகத்ரக்ஷகருக்கு பிரதிநிதியாய் விளங்கும் மாட்சிமை தங்கிய மன்னர் மகிழ்ந்து, எவ்வித பட்டத்திற்கும் அருகனில்லாத அடியேனுக்கு அளிக்கப்பட்டது, குடிகளிடத்தில் ஏற்பட்ட அன்பின் காரணமென்றே சொல்லவேண்டும். என்னை இங்கு கௌரவப்படுத்த வந்துள்ள நண்பர்களனைவருக்கும் மிகவும் நன்றிபாராட்டுகிறேன். மன்னர்பிரான் நீடூழி வாழ்க (எல்லோரும் 3 தரம் சொல்லி பிரிகிறார்கள்)

குமார் :—டாக்டர் குமாரி மறுபடி சந்திப்பது எங்கு ?

குமாரி :—ஆஸ்பத்திரியில் ஜாகை, நகரத் தோட்டத்தில் நாளை மாலை சந்திக்கலாம். (செல்லுகிறார்கள்)

---

## காட்சி 27

இடம் :—நகரத்தோட்டம் மைசூர்.

[ரேடியோ பாடுமிடத்தில் அனேக ஜனங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். டாக்டர் குமார் மோட்டாரில்வந்து தனித்த யிடத்தில் நிருத்தி, டாக்டர் குமாரி வருகைக்காக கார்த்துக்கொண்டிருக்கிறான் டாக்டர் குமாரி காரில்வர குமார் காரிலிருப்பதைக் கண்டு ஹாரன்செய்து இறங்குகிறாள். குமார் உடனே யிறங்கி ஒருவருக்கொருவர் நமஸ்கரித்து நடந்துசெல்லுகிறார்கள் அதை கவனித்த சிலர் சம்பாஷிக்கிறார்கள்.]

1 ஒருவன் :—வனையா ஜோடியே கவனித்தாயா?

2 ஒருவன் :—இரண்டுபேரும் இந்த ஊர் டாக்டர்கள்.

1 ஒருவன் :—இருந்தா ஜோடி போட்டுக்கொள்ளக்கூடாதா?

3 ஒருவன் :—ஆடவனும், பெண்ணும் பேசிக் கொண்டு போனு தப்பா நினைக்கிறதா.

1 ஒருவன் :—நேகமூவும், பாஸமூவும், சேர்ந்தா கரண்ட்டு ஏற்படாதோ?

2 ஒருவன் :—கரண்ட்டானு ஏற்படட்டும், ஷாக்கானு அடிக்கட்டும் நமக்கென்ன.

3 ஒருவன் :—இணைத்துத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன் ?

2 ஒருவன் :—உண்மை, ஊரார் சங்கதி நமக்கேன்.

1 ஒருவன் :—உலகம் எப்படி யிருக்கிறதென்று தெரிஞ்சிக்க வேண்டாமா?

3 ஒருவன் :—பாட்டு கேட்டுப்போக வந்ததைவிட்டு வீண் வம்பு பேச்சு ஏன்.

[குமாரனும், குமாரியும், புஷ்பச் செடிகள் அடர்ந்த யிடத்திலுள்ள பளிங்குகல் ஆசனத்திலமர்ந்து.]

குமார் :—இப்போது டென்னிஸ் ஆடுவதில்லையோ?

குமாரி :—ஆடாமலென்ன !

குமார் :—எங்கு.

குமாரி :—எங்கள் ஆஸ்பத்திரி காம்பௌண்டில் டெனிஸ் கோர்ட்டிருக்கிறது. அங்கு இதர டாக்டர்களுடனும், நரஸுகளுடனும் விளையாடுகிறேன்.

குமார் :—என்னுடன் எப்போது விளையாடுவது ?

குமாரி :—டோர்னமெண்ட் ஏற்பட்டால் விளையாடலாம்.

குமார் :—ஏன் என்னை ஜெயிப்பதற்கா!

குமாரி :—நீங்கள் ஜெயிப்பதை வேண்டாமென்கிறேனு!

குமார் :—உன்னிடத்தில் முடியாது.

குமாரி :—பெண்பிள்ளை யிடத்திலா யிப்படி பயப்படுவது. (நகைக்கிறாள்)

குமார் :—உங்களிடத்தில் பயந்து ஐக்கியப் படுகிறவர்கள் தானே.

குமாரி :—கடவுள் ஒருவரிடத்தில் பயந்து ஐக்கியபடவேண்டும் மற்றப்படி நாமெல்லோரும் சமத்துவந்தானே.

குமார் :—உண்மை, ஒரு விஷயத்தில்மட்டும் பெண்களிடத்தில்......

குமாரி :—அதென்ன விஷயம் ?

குமார் :—காதல்......

குமாரி:—அதற்கும் இருவர் மனமும் இசைந்தால், இருவரும் ஒருவருக்கொருவர் ஐக்கியமானவர்களே.

குமார் :—அவ்விதம் நேர்ந்தால்......அதிருக்கட்டும் நான் உன்னுடன் ஒரு விளையாட்டு ஆடபிரியம்.

குமாரி :—என்ன விளையாட்டு ?

குமார் :—சொல்லுமுன் அதில் நான் ஜெயம்பெரும்படி செய்வதாக உருதி கூறினால் சொல்லுகிறேன்.

குமாரி :—உங்கள் சாமர்த்தியத்தை பொருந்தியதற்கு நான் உருதி சொல்லுவதாவது.

குமார் :—உனது உருதிமொழி பெறாது ஜெயம்பெற முடியாது.

குமாரி :—சரி ! ஜெயம்பெரும்படியே செய்கிறேன். சொல்லுங்கள்.

குமார்:—இல்லரத்தில் சதிபதிகளாய் இன்புறும் விளையாட்டில் (மௌனமாயிருக்கக் கண்டு) தவராயின் மன்னிக்கவும்.

குமாரி :—(பெருமூச்சுவிட்டு) தவராக நினைக்கவில்லை.

குமார் :—பிறகு எதற்காக மௌனம் ?

குமாரி :—தங்கள் பிரியத்திற்கு நான் அருகளல்லவென்கிற யோசனைத்தான்.

குமார் :—எது விஷயத்தில் வேறு...எவர்பேரிலா......

குமாரி :—இல்லை! குலம், கோத்திரம் தெரியாத என்மீது பிரியப்பட்டால் தங்கள் பெற்ேறார் சம்மதிப்பார்களா?

குமார் :—அதுகள் எதற்கு, குணவதியே மேன்மையுடையவள். அன்றியும் எனது வாழ்நாட்களை சுகமாய் போக்க முயற்சிப்பது என்னுடைய பொருப்பல்லவா?

குமாரி :—உண்மை, தங்கள் கருத்திற்கேற்ற குணவதிகள், உறவினர்களிலில்லையா ?

குமார் :—இருப்பினும். கல்வி கற்றுணர்ந்த கன்னிகை உன்னையே காதலிக்கிறேன்.

குமாரி :— அவ்வித நோக்கமுள்ளவருக்கு கடவுள்தான் கிருபை செய்யவேண்டும்.

குமார் :—காதலர்களிருவர் மனமும் இசைந்தால் கடவுள் கிருபை பெற்றதே யாகும்.

குமாரி :—பெற்ேறார் பிரியத்தையும் கலந்து வாருங்கள்......

குமார்:—உத்தமியின் உருதிமொழிபெற்ருல் முயற்சிக்கலாம்,

குமாரி :—உம். எவ்வித உருதி வேண்டும்?

குமார் :—அரிய உனது முத்தத்தால்......

குமாரி :—தற்சமயம் சொல்லையே அவ்விதம் கருதுங்கள். பரமன் அருள் பாலித்தால்......

குமார் :—உண்மை காதலர்களை கடவுள் காப்பார்.

குமாரி :—நானும் அவ்வாறே நினைக்கிறேன். நேரமாகிறது போகலாம். (இருவரும் கைகுலிக்கி பிரிகிருர்கள்.)

## காட்சி 28

இடம் :—சுகுமார் வீடு.

[டாக்டர் குமார் பிதா. மகாலிங்கம் அமர்ந்து புராண கதைகள் வாசித்துக்கொண்டிருக்கும் சமயம் அவர் மனைவி ஞானம்பாள் வந்து]

ஞானம்பாள் :—எப்போ பாத்தாலும் சனியன் பிடிச்ச புராணந்தானு (பிடிங்கி எறிந்துவிடுகிறாள்.)

மகாலிங்கம் :—அடடா! என்ன இப்படி செய்தாயே. பகவான் லீலைகளை வாசித்தால் புண்ணியண்டியம்மா புண்ணியம்.

ஞா :—புண்ணியத்தே நேரா கண்டவர்தான்.

ம :—அதனுல்தான் நாலு காசோடிருக்கிறது.

ஞா :—அதனுலியா வந்தது, என்னே கல்யாணம் பண்ணிக் கொண்டதினுல் வந்ததுண்ணு சொல்லுங்கோ.

ம :—சந்தணக்கட்டை வியாபாரத்தில்கூட வரலியோ!

ஞா :—அதுக்கு முன்னே சந்தணக் கட்டை வியாபாரஞ் செய்ய, இந்த கட்டை புத்திக்கு ஏற்பட்டதா?

ம :—அம்மா மஹாலக்ஷ்மிநீ, உன்னுல்தான் வந்தது போயேன், இதுக்கு இப்படி கோவிச்சிக்குவானே.

ஞா :—கோவமா...குட்டி சுவருக்கு ஆறு பலே வயசு மாத்திரம் ஆச்சி குடும்பத்தே கவனிக்கிறீங்களா?

ம :—எதை கவனிக்கவில்லே என்கிறாய்?

ஞா :—நமக்குயிருக்கும் அருமையான ஒரு பிள்ளே, படிச்சி பெரிய உத்தியோகம் பண்றுனே......

ம :—ஆமாம், பண்றுன் என்ன அவனுக்கு?

ஞா :—என்னுவா-படிப்பிலே பாதி வயசு போச்சி, இப்போவாவது ஒரு குடிவழியாக்க வேண்டாமா?

ம :—இதுக்கா இவ்வளவு ஆர்பாட்டம், செய்துட்டா போச்சி.

ஞா :—சுயபுத்தி ஏது, நான் சொன்ன பிறகுதானே தோணிச்சி.

ம :—அப்படிதான் வச்சிக்கோ, நல்ல பெண்ணு பாத்து செய்துள்ளாம்.

ஞா :—நல்ல பெண்ணே வலைவீசி பிடிக்கவேணுமோ.

ம :—சொந்தத்தில் எந்த பெண்ணிருக்கிறது ?

ஞா :—ஏன் ! மன்னார்குடியில் மாரிமுத்து மகளில்லையா ?

ம :—அதுவா.........

ஞா :—உங்க கண்ணுக்கு பெண்ணு தோணலியோ ?

ம :—பெண்தாண்டியம்மா பெண்தான், படிச்ச பையன் பட்டிக்காட்டு பெண், என்னசொல்லுவானோ !

ஞா :—தனக்கு மினுக்கினு யிருந்தா, குடித்தனத்துக்கு ஏற்றதாயிருக்க வேண்டாமோ, நாம் சொன்னு கொழுந்தே தட்டமாட்டான்.

ம :—உம் - உன் கர்நாடக புத்திபோகலே.

ஞா :—ஆமாம், உங்க புத்தி குலக்கொழுந்துதான் (டாக்டர் குமார் வருகிறான்) குழந்தையும் சமயத்தில் வந்துட்டான்.

குமார் :—என்ன சங்கதி ?

ம :—அப்பா ! உனக்கு கல்யாணம் செய்யவேணுமாம்.

குமார் :—செய்துக்கொண்டா போச்சி.

ஞா :—பார்த்தீங்களா என்னயிருந்தாலும் குழந்தே புத்தியே புத்தி அடுத்த மாசத்திலியே நாள் பாருங்கோ முடிச்சிடலாம்.

குமார் :—பெண் யில்லாமலா கல்யாணம்.

ஞா :—சொந்தத்திலிருக்கிறதே பெண்ணு.

குமார் :—சொந்தத்திலா .....யார் பெண்.

ஞா :—உன் மாமன் மாரிமுத்து மகள்.

குமார் :—அதுவா......

ஞா :—அதுக்கென்ன கிளியாட்டமிருக்கிறது.

குமார் :—உங்கள் கண்ணு அப்படி யிருக்கலாம்.

ஞா :—உனக்கு?

குமார் :—காக்கை போல்.

ஞா:—ஹோ! சரிதான் இவ்வளவு பேச தெரிஞ்சிக்கினியா?

குமார்:—எல்லாம் உங்கள் அனுக்கிரகத்தால் தான்.

ஞா :—படிக்க வைச்சதினுல் எதிர்த்து பேச தெரிஞ்சிக் கொண்டே.

குமார் :—எதிர்த்து பேச வில்லையே.

ஞா :—காக்கையாட்டு மிருக்கிறதிண்ணு என்னு அர்த்தம்.

குமார் :—எனக்கு ஏற்படும் பெண்ணுடன் குடும்பத்தில் சுக துக்கங்களை அனுபவிப்பவன் நானு? நீங்களா?

ஞா :—அதுக்காக......

குமார் :—நான் விரும்பும் பெண்ணை மணந்தால்......

ஞா :—அப்படி விரும்பும் பெண் தெய்வலோகத்திலிருந்து வந்திருக்கிருளா?

குமார் :—பூலோகத்திலிருக்கப்பட்டவள்தான்.

ஞா :—அந்த கழுதெ யாருடா?

குமார் :—கோபிக்கவேண்டாம் - அவள் என்னுடன் டாக்டர் பரிக்ஷையில் தேறி இந்து ராணி ஆஸ்பத்திரியில் டாக்டராயிருக்கிருர்கள்.

ஞா :—சொந்தத்திலிருப்பதை விட்டு ஒரு பற முண்டையே பண்ணிக்கப் போரையா, இதுக்குத்தானு பத்துமாசம் சுமந்து பெத்து, ஈ எறும்பு கடிக்காதே காப்பாத்தி, படிக்கவச்சி, பெரிய உத்தியோகத்தில் வச்சது. (விசனிக்கிருள்.)

குமார் :—இந்த நீலிதனத்திற்கும் - காளிதனத்திற்கும் - நான் வசப்பட்டவனல்ல.

ஞா :—நீலியின்னும், காளியின்னும், சொல்லமாட்டியா செடி மரமான பிறகு, அந்த மாரிமுத்து மகளெ எப்படி கட்டாதே போறியோ பாக்கிறேன். (கோபத்துடன் செல்லுகிருள்.)

குமார் :—அப்பா ! ஒரு பதிலும் சொல்லாது மௌனமாயிருக்குறீர்களே ?

மகாலி :—உங்களிருவர் மத்தியில் பேசினுல் பத்ரக்காளிக்கு பதில் சொல்ல முடியாதப்பா.

குமார் :—உகந்த பெண்டீர் பெருவது பூர்வ புண்ணிய வசமே. உம் - உங்கள் விதி - அப்பா ! என் பிரியத்திற்கு தாங்களாவது உடன்படுவீர்களா ?

ம :—இஷ்டம்போல் செய். அப்பெண்ணின் பெற்ரோர் யார் ?

குமார் :—அவள் பிறந்த ஒரு மாதத்தில் தாயை யிழந்தவள்.

ம :—தந்தை யார் ?

குமார் :—இன்ஞரென்று அறியாளாம்.

ம :—அவ்வித பெண் எக்குலத்தினளென்று அறிவது ?

குமார :—இக்காலத்தில் அதுகளே யார் கவனிக்கிருர்கள், கல்வியும், குணமும், பொருந்தியவளே உயர்குலத்தினள்.

ம :—நாம் நடந்தாலும், நம் பந்துக்கள் சம்மதிக்க வேண்டாமா, தீர விசாரித்து செய்வது நலம்.

குமார் :—சரி, கூடியவரையில் விசாரித்து பார்க்கிறேன்.

ம :—அப்படியே செய்.

---

## காட்சி 29

இடம் :—மீனாக்ஷி மந்தர், மைசூர்.

[பிரஜாப்பிரிய பூஷணம் மேயர் சுந்தரம் தனது படுக்கைக்கு எதிரேயுள்ள தாழ்வாரத்தில் நின்று ஏழைகளுக்கு அரிசியும், 4 அணாவும் கொடுத்த பிறகு, ஒரு சோபாவில் சாய்ந்தவண்ணம் நாவல் வாசித்துக் கொண்டிருக்கிறார் டாக்டர் குமார் வருகிறார்.]

சுந்தரம் :—(பார்த்து) டாக்டர்வாளா - உட்காருங்கள், என் லேடி டாக்டரை அழைத்துவரவில்லையா ?

குமார் :—(உட்கார்ந்து) அழைத்து வந்து பேஷண்டை சோதித்து வரும்படி உள்ளே அனுப்பியிருக்கிறேன். சமயல்காரி விஷயத்தில் இவ்வளவு விஸ்வாசம் பாராட்டுபவர்களை பார்த்ததில்லை.

சு :—ஆதரவற்றவர்களை காப்பாற்ற வேண்டும், அதிலும் பெண்பால், அத்துடன் அவள் நாயகன் குமரப்பா என்பவன் ஆதியில் எனக்கு செய்த நன்றிக்காவது அன்பு பாராட்டாவிட்டால் கடவுள் கிருபைசெய்வாரா! (டாக்டர் குமாரி வருகிறாள் உற்று கவனித்து முகம் மாறுதலடைகிறது).

குமார் :—இந்தம்மாள்தான் டாக்டர் குமாரி என்பவர்.

சு :—அப்படியா, நமஸ்காரம் அமருங்கள் (பெருமூச்சிவிடுகிறார்)

குமாரி :—நமஸ்காரம் (அமருகிறாள்).

குமார் :—(சுந்தரத்தின் முகமாறுதலையையும், பெருமூச்சிட்டதையும் கவனித்து) என்ன சார்! தங்கள் முகம் ஓர்வித மாறுதலடைந்து பெருமூச்சி விடுகிறீர்கள் ?

சு :—ஒன்றுமில்லை, இந்த அம்மாளைக் கண்டவுடன் எனது இளமை வாழ்நாளில் தோன்றிபிரிந்த உருவின் நினைவு ஏற்பட்டது.

குமாரி:—உலகத்தில் ஒருவரைப்போல் ஒருவரிருப்பதுண்டு.

குமார் :—பெண்பிள்ளை பிறந்து ஒருகால் இறந்திருக்கலாம்.

சு :—அப்பாக்கியம் பெறாத பாபி நான் - சரி - வந்துள்ள காரியத்தை கவனிப்போம், பேஷண்டை பார்த்தீர்களா ?

குமாரி:—பார்த்தேன், வயற்றில் கட்டியிருக்கிறது, அதனுல் தான் ஜுரம், ஆபிரேஷன் செய்தால் குணப்படும்.

சு :—அவ்விதமே செய்யுங்கள், என்ன சிலவானுலும் பாதகமில்லை.

குமார் :—இங்கு செய்ய முடியுமோ ?

குமாரி:—கஷ்டம், ஆஸ்பத்திரியில்தான் சௌகரியப்படும், அந்தம்மாள் தங்களுக்கு......

சு : அன்னைபோல் என்னை ஆதரிக்கப்பட்ட மாது.

குமார் :—அவருடைய சமயல்காரி, ஆதரவற்ற ஸ்திரி.

குமாரி:—திக்கற்றவர்களிடத்தில் இவ்வித கருணைக்காட்டுவது விசேஷம், திக்கற்ற என்னுடைய தாயுக்கும் பாம்பே மெட்டர்னடி ஆஸ்பத்திரியில் கருணை புரிந்தார்களாம்.

சு :—இப்போது அந்தம்மாளுக்கு ஒரு குறைவுமிராது.

குமாரி :—அவ்வித சந்தோஷத்தை அடைய பாக்கியம் பெறவில்லை.

சு :—காலமாய் விட்டார்களா?

குமாரி : ஒருமாத குழந்தையில் விட்டு சென்றுவிட்டார்கள்.

சு :—விசனிக்கத் தக்கது, தகப்பனுர்?

குமாரி :—அவர் இருக்குமிடமே ஏற்படவில்லை. குழந்தையிலிருந்து என்னை திக்கற்ற பெண்கள் வாசஸ்தலத்தில் வளர்க்கப்பட்டு, பிரிடிஷ் அரசாங்கத்தார் உதவியால் இப்பதவியை அடைந்தேன்.

சு :—பாவம், தாய் முகத்தையும் காண பிராப்தமில்லை.

குமாரி :—போட்டோவிலாவது பார்க்க புண்ணியம் பெற்றேன்.

சு :—எப்படி?

குமாரி :— ஆஸ்பத்திரியில் இறந்த என்தாய் போட்டோவை எடுத்து சிறிதுசெய்து லாக்கட்டில் போட்டு என்கழுத்தில் அணிந்தார்களாம், இதோ இருக்கிறது பாருங்கள். (கழுத்தில் லாக்கட்டுடனிருந்த சங்கிலியை கழிற்றி கொடுக்கிருள்).

சு :—(லாக்கட்டிலுள்ள படத்தைப்பார்த்து) ஹா! மீனுக்ஷி! மீனுக்ஷி!! மண்ணுலகைவிட்டு மறைந்தனையா?

குமார் :—என்ன சார்! அந்தம்மாள் உங்கள் பந்துவா?

சு :—என் வாழ்க்கைத் துணைவி, அதோ பாருங்கள் (அருகிலுள்ள தன் படுக்கறையின் கதவை திறக்கிருன் அங்கு பெரிதுசெய்து மாட்டியுள்ள மீனுக்ஷி படத்தைப் பார்க்கிருர்கள்).

குமாரி:—(உடனே) என் அன்னையின் உருவமே, பிதா! பிதா!!

(ஆலிங்கனம்செய்து) அன்னை முகத்தை காணாத நான் தங்கையாவது காணப்பெற்றது என்பாக்கியமே. (மறுபடி தாய் படத்தைப் பார்த்து பல சிந்தனையுடன் நிற்கிறாள்).

சு :—என்ன சிந்தனையுடன் யோசிக்கிறாய் குழந்தா.

குமாரி :—இப்படத்தில் செல்வாக்கோடிருக்க, ஆதரவற்று ஆஸ்பத்திரியில் என்னை பிரசவிக்க நேர்ந்த காரணம் அறியக்கூடுமோ ?

சு :—கண்மணி குழந்தா! என் வாழ்க்கையின் இரகசியத்தை இங்கு இதுகாறும் எவருமறியார்.

குமார் :—நான் கேட்கக் கூடியதாயின்......

சு :—அவசியம் கேட்க, உமது வாழ்க்கைக்கும் துணைபுரியக் கூடியதே, அம்மா குமாரி! உன் அன்னைக் கற்புடையாள், (முகமலர்ச்சி அடைகிறாள்) செல்வாக்கிலிருந்த போது எடுத்த படமிது. பால்யத்தில் நான் துற்புத்தியால் சூதாடி செல்வத்தை யிழந்து, ஓர் சத்திரத்தில் 4 மாத கர்பணியான உன் தாயைவிட்டு, நண்பர் உதவி பெற சென்றபோது மோட்டர் விபத்தினால் ஆஸ்பத்திரிக்குச் சென்ற நாள் முதல் பிரியநேர்ந்தது. பல கஷ்டங்களை அடைந்து இங்கு ஒரு கூலிவேலையிலமர்ந்து நாளடைவில் இப்பதவியை அடைந்தேன். பிரிந்த உன் தாயைப் பார்க்கப் பிரியப் பட்டவனாய் சென்னையிலிருந்து போட்டோவை போட்டோகிராபரிடமிருந்து பெற்று பெரிதுசெய்து, மனங் கலங்குங்காலத்து கண்ணுற்று வந்தேன், என் கவலையைத் தீர்க்க உத்தமி உன்னை யீன்றுசென்றனள். உன்னைக்காண இன்றே வாழ்க்கையில் இன்புற்ற நாள்.

குமார் :—பல கஷ்டங்களை அனுபவித்தும் கடைசியில் உயர் பதவியை அடையநேர்ந்தது புகழத்தக்கதே.

சு :—எல்லாம் என்னுடைய கிரகத்தின் லீலைகளேயாகும்.

குமார் :—இப்போது நன்மை செய்துவரும் தங்கள் கிரகம், எனது வாழ்நாட்களேயும் சந்தோஷிக்கச் செய்யகூடிய தாயுமிருக்கிறது.

சு :—தங்கள் கருத்து விளங்கவில்லையே.

குமார் :—தங்கள் குமாரி, டாக்டர் குமாரியை கேட்டால் விளங்கச் சொல்லுவாள்.

குமாரி :—ஏன், நீங்கள்தான் சொல்லக்கூடாதோ ?

குமார் :—உன் வாசாவிலிருந்து வந்தால் விசேஷம்.

சு :—குழந்தாய் நீ தான் சொல்லேன்.

குமாரி :—நாங்களிருவரும் பம்பாய் வைத்திய கலாசாலையில் ஒன்றாய் வாசித்து, பிறகு கடவுள் கிருபையால் இவ் ராஜியத்திலேயே இருவரும் வேலையில் அமர்ந்து இணை பிரியாது நேசித்ததால் இருவருக்கும்......

சு :—மெத்த சந்தோஷம், உங்கள் சம்மதப்படியே இருவரையும் தம்பதிகளாக்கி விடுகிறேன். ஆனால்........இவருடைய பெற்றோர்......

குமார் :—அவர்களால் தடையுற்றிருந்த விஷயம் இன்றே நிவர்த்தியாயிற்று.

சு :—அப்படியாயின் நானே சென்று கலந்துபேசி, மங்களகாமாய் முடித்து வைக்கிறோம்.

குமார் :—சந்தோஷம், டாக்டர் குமாரி இனி இவ்விடத்திலிருக்கலாம்.

சு :—இனி எங்கு செல்வது?

குமாரி :—பிதா ! பெரிய டாக்டர் துரைசாணியம்மாளிடம்

விஷயத்தைச் சொல்லி உத்தரவு பெற்றுதான் வரமுடியும்.

சு :—அவ்விதமே செய் குழந்தாய்.

குமார் :—யாவும் இன்று சந்தோஷமாய் முடிந்தது (இருவரும் எழுந்திருக்கிறார்கள்.)

குமாரி :—ஹா ! மறந்தேன். நாளைய தினமே பேஷண்ட்டை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுங்கள்.

சுந்தரம் :—கட்டாயம். (இருவரும் சந்தோஷமாய் செல்லுகிறார்கள்.)

---

## காட்சி 30

இடம் :—மீனாக்ஷி மந்தர்.

[சுந்தரம் ஒரு சோபாவிலும், குமாரியும், குமாரும் மற்றொரு சோபாவிலும் அமர்ந்திருக்க சமயற்காரி சொர்ணம்பாள் ஒருபுரம் நிற்கிறாள்].

சுந்தரம் :—உங்களிருவர் பிரியப்படி அன்பிற் சிறந்த தம்பதிகளாக்கி, இப்பிரபஞ்சத்தில் நான் பேரானந்தமுற்றேன். எனது வாழ்நாட்களில் நேர்ந்த பல துன்பங்களையும், இன்பங்களையும் அடைந்து, என்னாலியன்ற அற்ப ஊழியத்தையும் ஏழை மக்களுக்குச் செய்தேன். இனி நான் இம்மாய உலக வாழ்க்கையை விலக்கி இச்ஜன்மம் சாபல்யமடையும்பொருட்டு, பல புண்ய தீர்த்தங்களில் மூழ்கி, திவ்ய க்ஷேத்திரங்களை தரிசித்து, ஞான உபதேசம்பெற சாதுக்களுள்ள மடத்தை அடைந்து ஈசன் பாதாரவிந்தமடைய பிரியப்பட்டுள்ளேன்.

குமாரி :—அன்பார்ந்த பிதா! என் வாழ்நாட்களில் தங்களை எவ்விதம் பிரிந்திருப்பேன்?

சுந்தரம் :—கண்மணி குழந்தா! நீ பிறந்த நாள் முதல் இது காரும் உன்னை ரக்ஷித்து, உயர் பதவியையும் பெறச் செய்த பரமனே உன் பிதா! அவரை சதா இருதயத்தில் நினைந்து சுக ஜீவியாய் வாழ்வாயம்மா.

குமார் :—பிரியமுள்ள மாமா, தங்கள் அருளால் என் வாழ்நாட்களை இன்பத்துடன் கழிக்கப் பெரும் பாக்கியத்தைப் பெற்றேன். தங்களுடன் பெருமையுடன் வாழாததைப் பற்றி விசனிக்கிறேன்.

சுந்தரம் :—பிரியகுமார், உலகநாதன் அருளாலும் கிரக லீலையாலும் யாவும் பெறக்கூடிய பாக்கியமே, உனது பிரிய மனையாருடன் மகிழ்வுடன் வாழ்வாய்.

சொரணம்மாள் :—பிரபு! விதந்துவாய் உலகில் உய்ய வகையற்றிருந்த இந்த ஏழையை இதுகாரும் தாய்போல் பாவித்து காத்த தங்களை எவ்வாறு பிரிந்திருப்பேன்?

சுந்தரம் :—அம்மணி! உன்னிடம் ஊழியத்தைப் பெற்றே காத்தவன், உனக்கு எவ்வித நன்மையையும் செய்தவனல்ல, உங்கள் புருஷன்செய்த நன்றியை மறவேன். உங்கள் ஆயுள் காலத்தை குமாரியின் ஆதரவிலிருந்து கழியுங்கள். (உடனே சென்று காவி உடை தரித்துக் கொண்டுவர யாவரும் நமஸ்கரிக்க) கடவுள் கிருபை பெருவீர்களாக. (செல்கிறார்.)

## காட்சி 31

இடம் :—வீதி மைசூர்.

[சுந்தரம் காவி உடையுடன் செல்ல ஆயிரக்கணக்கான ஏழை ஜனங்கள் பின்தொடரப் பார்த்துநின்று.]

சுந்தரம் :—அன்பார்ந்த சகோதரர்களே! அடியேனுக்கு உத்தரவளித்து நில்லுங்கள்.

1 ஏழை :—சுந்தர புருஷராய் விளங்கிய தங்களை எப்படி பிரிந்திருப்போம்?

2 ஏழை :—எங்கள் குடி பழக்கத்தை விலக்கி ரக்ஷித்த தங்களை காணுதிருப்பதெப்படி?

3 ஏழை :—சூதாடி பாதவித்த எங்களுக்கு நற்புத்தி புகட்டிய புண்ய புருஷரை எப்போது காண்போம்?

4 ஏழை :—கலியுக கர்ணராக அவதரித்து, ஏழைகளாகிய எங்கள் விஷயத்தில் கருணை செலுத்திவந்த கர்த்தாவை பிரிவதெப்படி?

சுந்தரம் :—அன்பிற்சிறந்த சகோதரர்! சகோதரிகளே!! நீங்கள் இச் சிறுவன்மீது அன்பு பாராட்டுவதற்கு எவ்வித நன்றியை பாராட்டப்போகிறேன்?

5 ஏழை :—ஐயனே! நாங்கள் நன் மார்க்கத்தையடைய, உபதேசித்துச் செல்லப் பிராத்திக்கிறோம்.

சுந்தரம் :—அன்பர்களே! பகவான் ஒவ்வொரு மானிடர்கள் இருதயத்திலும் குடிகொண்டுள்ளார். ஆகவே, ஏழையாயினும், எக்குடிப் பிறப்பினராயினும், சமத்துவமாக பாவித்துத் தங்கள் உயிர்போல் பிறருயிரையும் நினைத்து, எவ்வித துன்பத்திற்கும் உட்படுத்தாது, இயன்றவரையில் நம்மிலும் ஏழை மக்களை ரக்ஷிப்பதே

மோக்ஷத்திற்குரிய சாதனமாகும். இதுவே என் கொள்கை.

எல்லோரும் :—தங்கள் கொள்கையை குரு வாக்காய் பரிபாலித்து வருகிறோம். (எல்லோரும் நமஸ்கரிக்க சுந்தரமும் நமஸ்கரித்துச் செல்லுகிறார்). சுந்தர புருஷருக்கு ஜே! (சொல்லிக்கொண்டே போகிறார்கள்.)

---

## 6 வருஷத்திற்கு பின்

## காட்சி 32

இடம் :—மீனாக்ஷி மந்தர் மைசூர்.

[டாக்டர் குமாரும், குமாரியும் தங்களது 5 வயதுடைய சுந்தரம் என்கிற பிள்ளையுடன், மீனாக்ஷியின் படத்திற்கும், சாது சுந்தரத்தின் படத்திற்கும் புஷ்ப மாலைசூட்டி பழ தினுசுகளை நைவேத்தியம்செய்து தியானிக்கிறார்கள். பிறகு குழந்தை சுந்தரம் கவனித்து.]

சுந்தரம் :—தாதாசாமி ஏம்மா பழம் சாப்பிள்ளே, கோவிச்சிக்கிறாரா?

குமாரி :—கோவமில்லே சாப்பிடமாட்டார்.

சுந்தரம் :—அண்ணைக்கி கோவில்லே சாப்டாரே - பார்த்தேனே.

குமார் :—அங்கே கொடுத்தா சாப்பிடுவார்.

சுந்தரம் :—நானு போயி கொடுத்துட்டு ஓடிவந்துரேன்.

குமாரி :—தூரம் நீ போகமுடியாது.

சுந்தரம் :—நீயும் வா...

குமார் :—நாயினா! யாரும் இப்போ போக முடியாது.

குமாரி :—நீ சாப்பிற்று துரெ (ஆபில் பழத்தை எடுத்துக் கொடுக்கிறாள்)

சுந்தரம் :—எனக்கு அது வாணா...

குமார் :—எது வேணுமோ நீயே எடுத்துக்கோ நாயினா !

சுந்தரம் :—அதல்லாம் வாணாபோ.

குமாரி :—பிறகு என்ன வேணும்?

சுந்தரம் :—தாதாசாமிக்கு போட்டுக்குதே மாலெ அது ஒணும்.

குமார் :—அதை எடுக்கக் கூடாது.

குமாரி :—எடுத்தா - தாதாசாமி கோவிச்சுக்குமே.

சுந்தரம் :—கோவிச்சிக்க மாட்டாரு போ.

குமார் :—நீயே கேளு கொடுத்த வாங்கிக்கோ.

சுந்தரம் :—தாதாசாமி! அண்ணெக்கி எனக்கு பழம்கொடுத் தியே இப்போ மாலெயே கொடேன். என் தாதா இல்லா நீ, கொடு தாதா...(இருகரங்களையும் ஏற்றுகிறான் உடனே படத்திலிருந்த மாலை கீழே விழுகிறது உடனே எடுத்து) தாதாசாமி கொடுத்தாரு பாத்தியா, நல்ல தாதா. (கழுத்தில் போட்டுக்கொள்ளுகிறான்).

குமாரி :—(உடனே குழந்தை சுந்தரத்தை எடுத்து முத்த மிட்டு) தாதாசாமிக்கு உன் மேலே ஆசைடா கண்ணு. மகானுக்கு குழந்தையின் மீது அன்பை பார்த்தீர்களா?

குமார் :—ஆம், மாசற்ற குழந்தைகள் பக்தி மேன்மையுற் றதே. மாசற்ற மனதுடன் ஈஸ்வரனை ஸ்மரித்தால் கிருபை பெறலாம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

Printed at the Abirami Press, (Godland & Co.) Printers, G. T., Madras.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 4 | சர். முனுசாமி முதலியார் | சர். முனுசாமி |
| 18 | 20 | யெடுத்துப்போ | யெடுத்தும்போ |
| 36 | 2 | பலுலாத்தா | புலாத்தா |
| 40 | 4 | சாண்பேன் | காண்பேன் |
| 63 | 7 | கண்ணு | கண்ணுக்கு |

அரை என்பதை அறை என திருத்தல்.